தனிப்பிரதி விலை அணா 0-2-6.

# KALANILAYAM

கலா நிலயம்.
V7, No.6. 8.2.1934.

3L
M211,N28KN
N34.7.6.
199156

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0

புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6- JUN 1934

Vol 7] 1934 ஆம் பிப்ரவரி மீ 8உ [No. 6

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 81
2. தமிழ்ப் பாடம்
வில்லிபாரதம்—கிருஷ்ணன் தூதுச் சருக்கம் 83
3. தமிழ் வேதக் கடலமுதம்
உபயவேதாந்த வித்வான் பரதிஷ்டி பயங்
கரம் ஸ்ரீ அண்ணங்கராசாரியர் ஸ்வாமிகள் 86
4. ஷேக்ஸ்ப்பியர் நாடகக் காட்சித்திரட்டு
(ஜான் அரசன்) T. S. நடராஜப்பிள்ளை B.A.B.L. 87
5. நம்மாழ்வார் வைபவம் (6-ம்பத்து, 4-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 89
6. மதுரைக் கோவை. (மதியுடன் படுத்தல்)
S. வையாபுரிப் பிள்ளை, B.A.B.L. 91
7. ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை
(ஈரகு ஜஞ்ஜோதி சாலதா)
P. B. ஸ்ரீநிவாசாச்சாரியார், B. A. 92
8. அப்பர் (64 கலை-இதிகாசம்-கந்தன் சரிதை)
E. N. தணிகாசல முதலியார், B.A.B.L. 94
9. வர்த்தமானம் 96

## கலாநிலயம்

### உண்மையே உண்மை யம்மா 3.

சீன வித்தகன் சாங்ட்ஸுவுடன் கணியன்பூங்குன்றனுங் கலந்து, திறவோர் காட்சியில் தாம் தெளிந்தபடி, வாழ்வாங்கு வாழ்கின்ற வாழ்க்கையின் மேன்மையை நலமுறவிளம்பினர். மனிதருடைய வாழ்க்கை அதற்குரிய இயற்கையாய நன்மையில் அமைந்திருப்பதன்றி, மனிதர்தம் சில குறைகளைத் தனித்தனி நீக்கி அவர்களுக்கு நன்மை செய்வதென்ற சீர்திருத்தங்களெல்லாம் அல்லலுக்கே அடிப்படையாகின்றன என்பதை உணராதவரையில் ஒருவரும் உய்யமாட்டார். மனிதர்தம் மனமென்பது மாண்படைந்து உயர்ந்தவோர் நல்வாழ்வில் அமர்ந்தால் அன்றி எவ்வகைநன்மையும் எய்திடாது. மனமாண்பு படைத்தவர்க்கு வேறு எவையெவை இல்லாவிடினும் குறையில்லை. மனமாண்பு இல்லாதார்க்கு வேறு எவை இருப்பினும் நிறைவில்லை. தாம் நல்வாழ்வு வாழ்வதற்கு விரும்புவோரும் மற்றவர்களை வாழ்விக்க விரும்புவோரும் இந்தச் செம்மையின் உண்மையை அறியவும், அறிந்ததை நினைக்கவும், நினைத்தபடி செய்து ஒழுகவும் முயலாமல் உழைப்பதால் உள்ளும் புறமும் ஊரும் உலகமும் குழப்பமே கொள்வதன்றி வேறு யாது விளையும்? மனத்தை மயங்கவிட்டு, உறுப்பும் உடலும் உடைமையும், உயிர்தானும் திரட்டுவது பேதைமையேயன்றிப் பிறிதொன்றில்லை. இந்தச் செவ்வியில், மெய்யுணர்வுடைய ஆங்கில ஆசிரியர் ஆஸ்க்கார் வைல்ட் என்பவர், கதையெனும் நலத்தினால் கட்டுரைத்தவோர் உண்மையை நாம் கருத்துள் கொள்ளல் நலம். அச்சிறு கட்டுரை பின்வருமாறு:—

"இராக்காலம்; தனியே இருந்தார் அவர். வட்டவாயுமைந்த ஓர் நகரத்தின் மதிற்சுவர் சிறிது தூரத்திற்கப்பால் அவர் கண்களுக்குத் தென்பட்டது. அந்நகரினை நோக்கி நடந்தார். நகரின் அருகு வருகையில், களித்துத் திரிவோர் காலடிச்சத்தமும், மதர்த்துச் சிரிப்போர் வாய்வரு மோதையும், பேரொலி பரப்பும் வாத்திய முழக்கமும் அவரது செவிகளை யெட்டின. வாயிலைத் தட்டினார் காவலாளர் சிலர் வந்து கதவைத் திறந்து அவரை உள்ளே விட்டனர்

"பளிங்கினாலாகிய பெரிய மாளிகை யொன்றினைக் கண்ணுற்றார். சுவரெலாம் பளிங்கு; பளிங்கினாய நெடிய தூணெலாம் பன்னிற மலர்மாலைகளால் அலங்கரிக்கப்பெற்றிருந்தன. அகிலின் நறும்புகை எங்குங் கமழ்ந்தது. விதம்விதமாக விளக்குக்கள் ஒளிசெய்தன. அவ் வீட்டினுட் சென்றார் அவர். வீட்டினுட் சென்றவர், மரகத மயமான அறைகளைக்கடந்தனர், மாணிக்க மயமான அறைகளைக் கடந்தனர், தந்த மயமான அறைகளைக் கடந்தனர். கடந்து, விருந்தாண்டயரும் பெரிய மாடத்தைச் சேர்ந்தார். அங்கு ஓர் பொன்மயமான கட்டிலில் பட்டினாலியன்ற பள்ளியின் மீது ஒருவன் சாய்ந்திருக்கக் கண்டார். மதுவின் மிகுதியால் சிவந்திருந்தன அவன் கண்கள்.

"வந்தவர் அன்னவன் பின்னேசென்று தோளினை மெல்லத் தொட்டு, 'இவ்வண்ணம் ஏன் நீ வாழ்கின்றனை' என வினவினார்.

"அவ்வளவில், அவன் திரும்பிப் பார்த்தான்: திரும்பிப்பார்த்து அவரைத்தெரிந்துகொண்டான்; தெரிந்துகொண்டு எதிர்மொழி யொன்று பேசுவானாகி, 'ஆம், நான் ஒருகாலத்தில் குட்டநோய் கொண்டிருந்தேன், அந் நோயை நீக்கினாய் நீ; மற்று எவ்வண்ணம் யான் வாழ்தல் வேண்டும்?' என்றனன். அதன்மேல் அவ

அவ்வீட்டைவிட்டு வெளியேவந்து மீண்டும் வீதியை எய்தினர்.

"சிறிது நேரங் கழிந்தபின், வண்ணந்தீட்டிய முகமும் அதரமும் உடையளாய், கோலமுடைய ஆடையுடுத்து, முத்துக்கள்பதித்த பாதுகைமீது ஒருத்தி அவ்வழி செல்லக்கண்டார். பதுமையின் அழகிய முகம் போன்றிருந்தது அவள் முகம். இவளுக்குப் பின்னே அழகிய ஆடையும் அணிகலன்களும் தரித்த வோர் இளைஞன் வேடன் என்ன மெல்லென மெல்லெனச் செல்லலானான். காமத்தால் கிளர்ந்தன அவன் கண்கள்.

"அவர் விரைந்து தொடர்ந்து அவ் விளைஞன்தன் கரத்தினைத் தொட்டு, "அம் மாதினை நீ ஏன் இவ்விதம் நோக்குகின்றாய்" என்று வினவினர்.

"அவ் விளைஞன் திரும்பிப்பார்த்து அவரைத் தெரிந்துகொண்டான். தெரிந்துகொண்டு, "ஆம், ஒரு காலத்தில் யான் குருடனா யிருந்தேன்; நீ எனக்குக் கண் அளித்தனை, மற்று, வேறு எதனை நான் பார்த்தல் வேண்டும்" என்று செப்பினான்.

"அதன்பிறகு அவர் விரைந்து முன்நடந்து, அம் மாதின் ஆடையைத் தொட்டுப் "பாவப் பழியுடைய வழியன்றி நடப்பதற்கு வேறோர் வழி யில்லையோ?" என்றனர்.

"அப்பெண் திரும்பிப்பார்த்து அவரைத் தெரிந்து கொண்டாள். தெரிந்துகொண்டு, "முன் நான் இழைத்திருந்த பாவங்களை நீதான் மன்னித்துவிட்டாயே, மற்று, இவ்வழியே இன்பமுடைய வழியாக இருக்கின்றது" என்று நகைத்தனள்.

"இதன்பின், அந்நகரத்தைவிட்டு வெளியேறிவிட்டார் அவர். வெளியேறி ஏகுமவர் வீதியின் ஓரத்தில் ஓர் இளைஞன் உட்கார்ந்து அழுதுகொண்டிருக்கக் கண்டார்.

"கண்டவர், அவனருகு சென்று, குனிந்திருந்த அவன் சிரத்தினைத் தொட்டு, "ஏன் நீ அழுதுகொண்டிருக்கின்றாய்" என்று வினவினர்.

"அவ் விளைஞன் நிமிர்ந்துநோக்கி அவரைத் தெரிந்துகொண்டான். தெரிந்துகொண்டு, 'ஆம் ஒரு காலத்தின் நான் மரணமடைந்தேன்; மரணத்தினின்று என்னை எழுப்பினாய் நீ. மற்று, அழுவதன்றி யான் வேறு என்ன செய்யவேண்டும்" என்று எதிர்விளம்பினான்."

* * *

குட்டநோய் தீர்த்ததும், குருடனுக்குக் கண்ணளித்ததும், ஒழுக்கம் வழுவிய மாதினை மன்னித்தருளியதும், மாண்டவனை மீண்டும் எழுப்பியதும், கருணைக் கடலாம் அவ் யேசுகிறிஸ்து நாதர் புரிந்த காரியங்கள் என்பதை அறியாதார் மிகச் சிலர். அவர் இன்றைக்கு இவ்வுலகிடை வருவாராயின், காணக் கிடக்கின்ற காட்சிகளும், கேட்கநிற்கின்ற கேள்விகளும், விளம்ப வருகின்ற மறுமொழிகளும் இன்னவா றல்லவோ அமைகின்றன என்பதை எண்ணியெண்ணியிரங்குகின்ற இதயத்தின் இரத்தத்தைப் பொழிந்து பேசியனவாம் ஆஸ்க்கார் வைல்டின் அம்மொழிகள். இறந்தொழியாமல் மனிதர் இன்று இருப்பதெல்லாம் அழுவதற்கே என அவர் காட்டி முடிக்கின்ற வாசகத்தைக் கேட்டவுடன் உள்ளம் இடிந்து விழவில்லையாயின் அது இரும்பினால் இயன்றதே. இதயம் உடையலாம்; உடைவதற்கென்றே அமைக்கப்பட்டது போலும் அது; மற்று இவைகளைக் கண்டு இரும்பாக மாறத்தான் ஆகாது. பிழைத்திருப்பதெல்லாம் அழுது அழுது அழிவதற்கே என்ற உணர்ச்சி தோன்றுவண்ணம் உலகத்தின் உவகையைப் பெருக்குவார் தாமே பெரியோர். உவகை என்னும் அம்மனநிலை, உறுப்பின் சிறப்பினால் வருவதன்று, உடலின் திடத்தினால் வருவதன்று, உடைமையின் படைப்பினால் வருவதன்று. மனத்தின் வனப்பே உவகை. இவ்வுவகையினின்றே அன்பும் அறனும் சுரக்கின்றன; மாநுடவாழ்க்கை அப்பொழுதே பண்பும் பயனும் உடையதாகின்றது. மனிதர்மனம் வனப்படைவதற்குரிய வழியை நாடாமல், என்புதோல்போர்த்த உடம்பிற்குரிய திருத்தங்களை இயற்றுவதால் யாது பயன்? பொருள் வருவாய்க்குரியவைகளைப் போதிப்பதால் தீமையேயன்றி நன்மையுண்டோ?

நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்ட திரு.

என்று சாற்றுகின்ற இவ் வாசகத்தின் ஒவ்வொரு சொல்லும் கோடி பெறும். நெஞ்சத்து நல்லம் யாம் என்றவோர் நினைவின் செல்வம் நேர்வதற்குரிய முயற்சிகளில் ஊக்கத்தைச்செலுத்துவதே இக்கால மாநுடக் கடமையும் முறைமையும் ஆகும். இதனை விட்டு வேறு செய்வதெல்லாம் வீண் மாத்திரமன்றி, கொடுமைக்கே அடிகோலிவைத்தவைகளாய்முடியும். இதனை உணராமல், பொய்யடையா அன்புடைய சிலர், அரசியலிலும் சனசமூகத்திலும், உரிமைக்கென்றும் பொருளிற்கென்றும் தருமத்திற்கென்றும் சீர்திருத்தங்கள் செய்பவரும் நினைவினராய் உலகத்தை உய்யாநெறியிலேயே உழக்கிவருகின்ற கொள்கையைக் கருதுங்கால் இரக்கமேமிகுந்து கலங்காதநெஞ்சம் யாதும் கல்லாத நெஞ்சமே.

உலகம் இன்று அவலமாய் நடக்கின்ற இக்காட்சிகளைக் கண்டும், மனித்தின் மாண்பினை உணர்ந்தும், அறியவல்ல அறிவாளிகளில் ஒருவரும் இங்கு யாம் உரைத்தவைகளின் உண்மையை மறுக்கமாட்டார்; அறிவிற்சிறந்தபெரியோர் என்றிருந்த பண்டையோர் எவரும் சரித்திரநினைவி லடங்கிய இப் பன்னெடும் நூற்றாண்டுகளில் இதுகாறும் மறுத்ததுமில்லை. எனினும், இன்று பலபட எங்கும் பேசுவதெல்லாம் இதற்கு மாறாகவே இருக்கின்றது. ஆயினும், அன்னவர்களில் நெஞ்சறிந்த வஞ்சகர்களாகியே விவகரிப்பவர் மிகச் சிலரே என்று எண்ணுகின்றோம். ஏனைய பெருந் தொகையினோர், கலகலவென்று ஓதுந் துணையே உதவவல்ல உலகநூல்களிற் சிற்சில கற்றிருப்பதால் தம்மை அறிவாளிகள் என்று மதித்துக்கொள்ளும் வகையில் தமக்கே வஞ்சகர்களாகி, தம்மிடத்தில்இல்லாத நல்லறிவைப் பிறர்க்குப் புகட்டத் தலைப்படுகின்றனர். இதனால் விளையும் பொல்லாங்கின் நினைவு அவர்களுக் கில்லையாயினும் அதன் பேறுப்பு அவர்களைச் சேராமற் போகாது. இவர்களன்றி, தங்கள் பேரைக் கூடப் பிழையில்லாமல் எழுதும்வகை பெற்றிராதவர், வர்த்தமானப் பத்திரிகைகளைத் தாம் ஒருவாறு வாசிக்கக்கூடியவர்களா யிருப்பதுபற்றியே தம்மைக் கல்விமான்களென்றும் அறிவாளிகள் என்றும் மதித்துக்கொள்வதுமன்றி, பரக்கப் பேசவும்பேசி, சீர்திருத்த ஆரவாரங்களும் உரிமைப் போராட்டங்களும், தருமப் பாதுகாவல்களும் புரியவருகின்ற இக் கலிகாலக் கோலத்தைக் காணுங்கால், கடவுள் [illegible] ர்த்துஅயராமல் நிலைநிற்பதற்கு அக்கடவுளின் அருள் ஒன்றே துணையாயினாலன்றி, வேறு நம் அறிவையே கொண்டு தடுமாற்றந் தீருமா றில்லையே.

எனினும் இவைகளை நினைத்து ஏங்கியேங்கி நெஞ்சம் புண்ணுவதால் யாதும்பயனில்லை. உலகம்உழல்கின்றபடி உழலட்டும், இவர்களும் செய்கின்றபடியெல்லாம்செய்யட்டும், அதன்விளைவும்ஆகுமாறுஆகட்டும். அதற்கெதிர் ஒருவரும் ஒன்றும் செய்யவேண்டா. அன்னவைகளுடன் தொடர்பில்லாத வேறு சில தமக்கே செய்துகொள்ளவும், மற்றவர்களுக்குச் செய்தமைக்கவும் யாவருக்கும் இயலுமே. அதனைச் செய்யாமல் வாளாவிருத்தல் அழகுமன்று அறமுமன்று. இது மிக எளிது; இது என்னவென்று உணர்ந்துகொள்வதும் கலாநிலய வாசகர்களுக்கு அருமையும் அன்று. மனமானது மாண்புபெற்றுச் சிறப்பதற்கு இலக்கிய உணர்வு இயைவதன்றி இற்றைநாள் வேறு நெறியில்லை. இத் தமிழ்நாடு வரையில், தமிழ்மொழியிலுள்ள இலக்கியங்களைப் போதிக்கவல்லவர் ஊர்தோறும் ஒருசிலரேனும் இலராகார். இன்னவர், தங்கள் ஊரிலுள்ளவர்களைத்தங்களால் இயன்றவரையில் தம்மோடு சேர்த்துக்கொண்டு, தமிழ்ச்சுவை அவர்களுக்கு வாய்க்கும்படி ஆவனசெய்து ஒழிந்த நேரங்களில் உதவிவருவார்களாயின் மிகவிரைவில் பண்பும் பயனுமுடைய வாழ்க்கை எங்கும் பரவத்தலைப்படும் என்பதில் ஐயமில்லை. வேறொன்றையும் நாம் விலக்க வேண்டா, நன்மையைக் கொணர்ந்தால் போதும்.

199156.

M211,N27KN
N34:3.6



---

# தமிழ்ப்பாடம் 106.

## வில்லிபாரதம்—உத்தியோகபருவம்.

[71-வது பக்கத் தொடர்ச்சி]

### கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

நீதூது நடந்தருளி யெமதுநினை
வவர்க்குரைத்தா னினைவின் வண்ணம்
தாதூதி யளிமுரலுந் தண்பதியுந்
தாயமுந்தான் றரா னாகின்
மீதூது வளைக்குலமும் வலம்புரியு
மிகமுழங்க வெய்ய காலன்
மாதூதர் மனங்களிக்கப் பொருதெனினும்
பெறுவனிது வசையு மன்றே. 9.

நீ சென்று கேட்டபின்னும் அவன் நாடு கொடானாகில் பின் பொருது வெல்வது பிழையன்று எனத் தருமன் கிருஷ்ணனைப் பார்த்துக் கூறுகின்றான்.

பதவுரை.

நீ - நீ, தூது நடந்து அருளி - தூதனாகப் போய் அருளி, எமது நினைவு - நாங்கள் இருக்கின்றோம் என்ற ஞாபகத்தை, அவர்க்கு - துரியோதனாதியர்களுக்கு, உரைத்தால் - சொன்னபிறகும், நினைவின் வண்ணம் - அந்த நினைவின்படி,

அளி - வண்டுகள், தாது - மகரந்தப்பொடியை, ஊதி - ஊதிக்கொண்டு, முரலும் - சப்திக்கின்ற, தண் - குளிர்ச்சிபொருந்திய, பதியும் - நகரத்தையும், தாயமும் - எங்கள் பங்காகிய நாட்டையும், தான் - அவன், தாரான் ஆகில் - கொடுக்கவில்லையானால்,

மீது - அதன்பிறகு, ஊது - சப்திக்கின்ற, வளைக் குலமும் - சங்குக்கூட்டங்களும், வலம்புரியும்-வலம்புரிச் சங்குகளும், மிக முழங்க-மிகுதியாகச் சப்திக்கவும், வெய்ய - கொடிய, காலன் - யமனுடைய, மா - பெரிய, தூதர் - தூதர்கள், மனம் களிக்க - மனம் சந்தோஷங் கொள்ளவும், பொருது எனினும் - போர் செய்தாகிலும், பெறுவன் - எனது பாகத்தை அடைவேன்.

இது - இவ்வாறு செய்வது, வசையும் அன்று - பழியும் ஆகாது—(புகழிற்கும் இடமாகலாம்) என்றான் தருமன்.

விரிவுரை:—எமது நினைவு, என்பதற்கு "நாங்கள் எவ்வாறாகிலும் எமது இராஜ்யத்தை மீண்டும் அடைய வேண்டும் என்ற கருத்து உடையவர்களா யிருக்கின்றோம்," எனப் பொருள் கூறலாம். அல்லது 'முன் செய்துகொண்ட நிபந்தனை,' எனினும் பொருந்தும். ஆயினும், "நாங்கள் இருக்கின்றோம் என்கிறஞாபகமே இல்லாததால் துரியோதனன் நாடு கொடுக்கின்ற முயற்சியொன்றும் செய்யாதவனாய்ச் சும்மா இருப்பினும் இருக்கலாம். முன் தூதுசென்றவர் அதனை வலியுற உரைத்திருக்க மாட்டார்கள். நீயே சொல்வாயாயின், நாங்கள் இருப்பதை நினைவிற் கொண்டவனாய் அவன் எங்கள் பாகத்தைக் கொடுத்துவிடவுங் கூடும்" என்று பொருள்கொள்வது, பிறரிடம் பிழைகாணாத் தருமனுடைய பெருந்தன்மைக்கு நனிபொருந்தும். 'எமது நினைவு' என்பதற்கு, "நாங்கள் இருக்கின்றோம் என்பதோடு, எங்கள் ஆற்றல் வீரம் முதலியவைகளையும் அவர்களுக்கு நினைவுபடுத்து" என்று அச்சுறுத்தும் மொழிகளைப் பகரச்சொன்னான் எனக்கருதுதல், தருமனுடைய சாந்தகுணத்திற்கு ஏற்றதன்று.

குறிப்பு:—நடந்து + அருளி = நடந்தருளி; அவர்க்கு + உரைத்தால் = அவர்க்குரைத்தால்; தாது + ஊதி = தாதூதி; பொருது + எனினும் = பொருதெனினும்;—குற்றிய லுகரங்களுக்குப்பின் உயிர்வர, அக் குற்றியலுகரங்கள் கெட்டுப் புணர்ந்தன.

நினைவு + அவர்க்கு = நினைவவர்க்கு-வகரமெய்யின் மேல் ஏறிய முற்றியலுகரத்திற்குப்பின் உயிர்வர, அம் முற்றியலுகரம் கெட்டது.

தூது + நடந்து = தூதுநடந்து; எமது + நினைவு—எமது நினைவு, மிக + முழங்க = மிக முழங்க; முழங்க + வெய்ய = முழங்க வெய்ய; இது + வசை = இது வசை;—நிலைமொழி யிறுதியில் உயிரும், வருமொழி முதலில் மெல்லின இடையினங்களும் வர, அவை இயல்பாய்ப் புணர்ந்தன.

அருளி + எமது = அருளியெமது; ஊதி + அளி = ஊதியளி; பதி + உம் = பதியும்; புரி + உம் = புரியும். நிலைமொழி யிறுதியில் இகர உயிரும், வருமொழி முதலில் உயிரும் வர, அவை யகர உடன்படுமெய் பெற்றுப் புணர்ந்தன.

---

முந்தூர்வெம் பணிக்கொடியோன் மூதூரி
னடந்துழவர் முன்றி றோறு
நந்தூரும் புனனாட்டின் றிறம்வேண்டு
நாடொன்று நல்கா னாகி

ஐந்தூர்வேண் டவையிலெனி லைந்திலம்வேண்
டவைமறுத்தா லடுபோர் வேண்டு
சிந்தூரத் திலகநுதற் சிந்துரத்தின்
மருப்பொசித்த செங்கண் மாலே. 10.

துரியோதனனிடம் உரைக்கவேண்டிய தூது இது வென்று தருமன் கிருஷ்ணனுக்குச் சொல்கின்றான்.

பதவுரை

சிந்தூரம் - குங்குமத்தாலாகிய, திலகம் - திலகத்தை அணிந்த, நுதல் - நெற்றியை உடைய, சிந்துரத்தின் -(குவலயாபீடம் என்னும்) ஆனையினது, மருப்பு- தந்தங்களை, ஒசித்த - ஒடித்த, செம்கண் மாலே-(தாமரைபோல்) சிவந்த கண்களையுடைய கிருஷ்ணனே,

முந்து - தனக்கு முன்னாக, ஊர் - ஏந்திச் செல்லப் படுகின்ற, வெம் - கொடிய, பணிக் கொடியோன்-பாம்பினது வடிவம் எழுதப்பெற்ற கொடியையுடைய துரியோதனனது, முதுமை ஊரின் - பழமையான நகரமாகிய அஸ்தினாபுரிக்கு, நடந்து - நீ சென்று,

உழவர் - உழவர்களது, முன்றில் தோறும்-முற்றங்களிலெல்லாம், நந்து - சங்குகள், ஊரும் - தவழ்கிற, புனல் நாட்டின் - நீர்வளம் பொருந்திய நாட்டினது, திறம் - எங்கள் பாகத்தை, வேண்டு - கொடுக்கும்படி கேள்,

நாடு ஒன்றும் - நாடென்பது எவ்வளவும், நல்கான் ஆகில்-கொடுக்க மறுத்துவிட்டால், ஐந்து ஊர் - ஐந்து ஊர்களாகிலும், வேண்டு - கொடுக்கும்படி கேள்,

அவை - ஐந்து ஊர்களும், இல் எனில் - கொடுப்பதில்லை என்று அவன் சொன்னால், ஐந்து இலம் - ஐந்து வீடுகளாகிலும், வேண்டு - கொடுக்கும்படி கேள்,

அவை மறுத்தால் - அவ்வீடுகளும் கொடுக்கமறுப்பானானால், அடு போர் வேண்டு - கொல்கின்ற யுத்தத்திற்கு வரும்படி சொல்—(என்றான் தருமன்).

விளக்கம்:—கம்ஸனது பட்டத்து யானை குவலயாபீடம். தன் அரண்மனைக்குள் வரும் கிருஷ்ணனைக் கொல்லும்படி அந்த யானையைக் கம்ஸன் ஏவினான். அப்பொழுது கிருஷ்ணன் அதனை யெதிர்த்து அதன் தந்தங்களையே பறித்து ஆயுதமாகக்கொண்டு யானையைக் கொன்றுவிட்ட கதை இங்குக் குறிக்கப்பட்டுள்ளது. "கூடத்துக் கம்ப வள மா வென்றான்" என்று அஷ்ட பிரபந்தத்தில் குறிக்கப்பட்டிருப்பதும் இது.

———

மூத்தோன்மற் றிவையுரைப்ப விளையோன்வெஞ்
சினமனத்தின் மூள மூள
நாத்தோமி லுரைபதறக் கதுமெனவுற்
றெழுந்திறைஞ்சி ஞால மெல்லாம்
பூத்தோனே பூந்தவிசிற் பூவைபுணர்
மணிமார்பா புன்மை யாவுந்
தீர்த்தோனே யூனமிலான் மானமிலா
துரைப்பதற்கென் செய்வ தென்றான். 11.

தருமராசன் அவ்வாறு பணிந்துகூறப் பீமசேனன் வெகுண்டு மறுத்துரைக்கத் தொடங்குகின்றான்.

பதவுரை.

மூத்தோன் - பாண்டவரில் மூத்தவனாகிய தருமன், (மற்று - அசை) இவை-இவ்வார்த்தைகளை, உரைப்ப- சொன்னவுடன்,

இளையோன்-அவனுக்கு அடுத்த தம்பியாகிய பீமசேனன், வெம் சினம் - கொடியகோபம், மனத்தில் - தன் மனத்தில், மூளமூள - மேன்மேல் உண்டாகவும், நா - நாக்கில், தோம் இல் - குற்றம் இல்லாத, உரை- வார்த்தைகள், பதற - பதறவும், கதும் என - விரைவாக, உற்று எழுந்து - எழுந்தவனாகி, இறைஞ்சி - வணங்கி,

ஞாலம் எலாம் - உலகங்களையெல்லாம், பூத்தோனே - (உந்தித் தாமரையிலிருந்து) சிருஷ்டித்தவனே; பூ - தாமரைப்பூவாகிய, தவிசில் - ஆசனத்தில் அமர்ந்த, பூவை - இலக்குமி, புணர் - சேர்ந்த, மணி - அழகிய, மார்பா - திருமார்பை யுடையவனே, புன்மை யாவும்-அடியார்களாகிய எங்களது சிறுமைகளையெல்லாம், தீர்த்தோனே - தீர்த்தவனே,

ஊனம் இல்லான் - சிறிதுங் குற்றம் இல்லாதவனாகிய இத் தருமன், மானம் இலாது - மானமும் இல்லாமல், உரைப்பதற்கு - இவ்வாறு சொல்வதற்கு, என் செய்வது - நானென்ன செய்வேன். என்றான் - என்று கூறினான்.

விரிவுரை:—ஸஹோக்தி என்று வடமொழியில் அழைக்கப்படும் புணர்நிலையணி (இதற்கு ஒருங்கியல் அணி, உடனிகழ்ச்சியணி என்ற பெயர்களும் உள) இப்பாசுரத்தின் ஈற்றடியில், "ஊனமிலான் மானமிலாதுரைப்பதற்கு என்செய்வது" என்ற இவ்வாசகத்தில் அடங்கியிருக்கின்றது. அவ்வணியின் இலக்கணத்தை 5-வதுவால்யூம் 804-வதுபக்கத்தில்முன் விரிவாகவிளக்கி இருக்கின்றோம். இன்மை என்னும் பண்புபற்றி, ஊனம் மானம் என்னும் இரண்டையும் கவி மிகவும் சாமர்த்தியமாகத் தருமனுக்குச் சேர்த்திருக்கின்றார்; ஆதலால், இது பண்புப்புணர்நிலை அணி யாகும். "ஊனம் ஒன்றும் இல்லாதது தக்கதே, ஆயினும், ஊனம் என்ற சொல்லிற்குப் பிராசமாகிய மானம் கூடவோ இவனிடம் இல்லாமற் போகவேண்டும்", என்று பீமன் தன் வெறுப்பை வெளிப்படுத்துவதில் மிகுந்த நயம் அமைந்திருக்கின்றது.

———

விரிகுழற்பைந் தொடிநாணி வேத்தவையின்
முறையிடுநாள் வெகுளே லென்று
மரபினுக்கு நமக்குமுல குள்ளளவுந்
தீராத வசையே கண்டாய்
எரிதழற்கா னகமகன்று மின்னமும்வெம்
பகைமுடிக்க விளையா நின்றாய்
அரவுயர்த்தோன் கொடுமையினு முரசுயர்த்தோ
யுனதருளுக் கஞ்சி னேனே. 12

இன்னமும் ஏன் நீ போரிடப் பின்னிடைகின்றாய் என வீமன் தருமனை இடித்துரைத்தல்.

பதவுரை.

விரி - விரிந்த, குழல் - கூந்தலையுடையவளாகிய, பைந்தொடி - பசுமையான வளையலை அணிந்த திரௌபதி, நாணி - வெட்கம்கொண்டு, வேந்து அவையில்- மன்னர்சபையில், முறையிடும் நாள் - (என் மானத்தைக் காக்கத்தான்மாட்டீர்களோ என்று) முறையிட்ட பொழுது, வெகுளேல்என்று-கோபியாதே என்று எங்களை அடக்கி, மரபினுக்கும் - நமது குலத்திற்கும், நமக்கும் - நமக்கும், உலகு உள் அளவும் - இவ்வுலகம் இருக்கின்றவரையில், தீராத - நீங்காத, வசையே கண்டாய் - பழியே சேர்த்துவைத்தாய்,

எரி - எரிகின்ற, தழல் - நெருப்பைப்போன்ற, கானகம் - காட்டினை, அகன்றும் - நீங்கியும், இன்னமும் - இன்னம்கூட, வெம் பகை - நமது கொடிய



பகையை, முடிக்க - துரியோதனனிடம் முடித்துக் கொள்ள, இளையாநின்றாய் - தளர்கின்றாய்,

அரவு உயர்த்தோன்-பாம்புக்கொடியை உயர்த்தினவனாகிய துரியோதனனது, கொடுமையினும் - கொடுமையைக்காட்டிலும், முரசு உயர்த்தோய் - முரசுக் கொடியை உயர்த்திய தருமனே, உனது அருளுக்கு- உன்னுடைய கருணைக்கே, அஞ்சினேன் - யான் பயப்படுகின்றேன்.

விரிவுரை:—மன்னர் முன்னிலையில் துச்சாதனன் திரௌபதியைத் துகிலிருந்தபோது, முறையோ இது வென அம்மாதராள் ஓலமிட, வீமனும் அர்ச்சுனனும் கோபத்தோடு அந்தப் பாதகர்களைக் கொல்லக் கருதி எழுந்திருக்கவும் தருமன், சூதிலே தாம் தோற்றிருந்ததற்குக் கட்டுப்பட்டுக் கோபியாதிருக்கும்படி தம்பியர்களை அமர்த்தியசெய்தியை வீமன் இப்பொழுது குறிப்பித்து, அதனால் தமக்கு நேர்ந்த பழியைச் சொல்லி இரங்குகின்றான். "அப்பொழுதுதான்நாம்வாய்மைக்குக் கட்டுப்பட்டு அவ்வாறு ஒடுங்கியிருந்தோமென்றால், நிபந்தனையின்படி பன்னிரண்டுவருடம் வனவாசமும் ஒருவருஷம் அஞ்ஞாதவாசமும் கழித்தபின்னும், மறுசொல்லில்லாமல் அவனைப் போரிற்கொன்று நம் பகையை முடித்துக்கொள்வதற்கு யாது தடை. அவ்வாறின்றி அவனிடம் ஐந்து ஊரும் ஐந்து வீடும் யாசித்து நாம் கிடப்பானேன். துரியோதனனதுகொடுமைக்கு நான் பயப்படவில்லை. ஏனெனில் அதனால் வந்த பழியைத் தீர்த்துக்கொள்ளினும் கொள்ளலாம். நீ இப்பொழுது அவனிடம் காட்டுகின்ற அருளினால் அப்பழியைத் தீர்த்துக்கொள்ளும் வழியேஇல்லாமற் போய்விடுகின்றதனால், இதற்கேநான் பெரிதும்அஞ்சுகின்றேன்" என்பது வீமனது கருத்து.

குறிப்பு:—வேந்து + அவை = வேத்தவை, என்று ஆவதற்கு விதி, முன் 6வது வால்யூம், 893வது பக்கத்தில் கூறப்பட் டிருக்கின்றது. வேந்து என்பதன் ஈற்றிலுள்ள உகரம் (அதற்கு அயலில் இருப்பது ந் என்னும் மெல்லின மெய்யாகையால்) மென்றொடர்க்குற்றியலுகரமாகும். நிலைமொழியிறுதியில்மென்றொடர்க்குற்றியலுகரமும் வருமொழிமுதலில் உயிரெழுத்தும் வருமாயின், அவ் வுகரம் கெட்டு, அது நின்ற மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறிக்கொள்வதும் அல்லாமல், நிலைமொழி ஈற்றிற்கு அயலெழுத்தாயிருந்த மெல்லினமெய்யும் சில சமயம் அதற்கு இனமான வல்லின மெய்யாகத் திரியலாம், என்று கூறியிருப்பதற்கு இணங்க, வேந்து அவை என்பது, வேத்தவை என ஆயிற்று.

இவ்வாறு திரிவன சிறுபான்மையே; பெரும்பான்மை திரிவதில்லை. எந்தஎந்தத் தொடர்களில் திரியும், எந்த எந்தத் தொடர்களில் திரியாது என்று வரையறுத்துச் சொல்வதற்கில்லை. வழக்கைக்கொண்டும்பெரும் புலவர்கள் எழுதியுள்ள செய்யுள்களைக்கொண்டும், திரிகின்ற சொற்கள் இவை, திரியாத சொற்கள் இவை என்று நாமாகத் தேர்ந்துவைத்துக்கொள்வது ஒன்றே கூடும். எனினும், வழக்கிலும் செய்யுளிலும் இவ்வாறு திரிந்து வருவனவற்றை முறைப்படுத்திப் பார்க்கும்போது பெரும்பான்மை பொருந்தக்கூடிய சில குறிப்புக்கள் தோன்றுகின்றன:—

i. ங் ஞ் ண் ந் ம் ன், எள்னும் ஆறு மெல்லின மெய்களில் ண் என்னும் மெய் ஒருபோதுந் திரிவது இல்லை:—

வண்டு + ஈட்டம் = வண்டீட்டம்
நண்டு + ஓட்டம் = நண்டோட்டம்.

ii. மற்றவை திரியுமெனின் ஆறும்வேற்றுமைத்தொகையில் திரிகின்றன:—

குரங்கு + இனம் = குரக்கினம்
வேந்து + அவை = வேத்தவை
வேம்பு + இலை = வேப்பிலை
(னகரமெய் ஆறும் வேற்றுமைத்தொகையில் திரிவதற்கு உதாரணம் தென்படவில்லை)

எனினும்,

பந்து + அழகு = பந்தழகு; கம்பு + உயரம் = கம்புயரம்; தெங்கு + இலை = தெங்கிலை, என ஆறும்வேற்றுமையிலும் திரியாம லிருக்கவும் இருக்கும்.

iii. ஆறும் வேற்றுமை தவிர மற்ற வேற்றுமைகளில் உருபுமாத்திரம் தொக்கு இருக்கின்ற தொடர்களில் திரிவதில்லை. உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் திரிந்துவரக் காண்கின்றோம்:—

இரும்பு + ஆணி = இருப்பாணி—(இரும்பினால் செய்த ஆணி) மூன்றும் வேற்றுமைஉருபும்பயனும்உடன்தொக்க தொகை.

கன்று + ஆ = கற்றா (கன்றோடு கூடிய ஆ) மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

வேம்பு + எண்ணை = வேப்பெண்ணை, (வேப்பம் பழத்திலிருந்து செய்த எண்ணை) ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

கரும்பு + ஆலை = கருப்பாலை (கரும்பைப் பிழியும் ஆலை) இரண்டாம்வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

நஞ்சு + அரவு = நச்சரவு (நஞ்சை உடைய அரவு) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

iv. பண்புத் தொகையில் ன் என்னும் மெய் திரியலாகின்றது:—

என்பு + உடம்பு = எற்புடம்பு (எலும்பாகிய உடம்பு)

பெரும்பான்மை இவ்வாறு திரிகின்றனவென்று கூறினோமேயன்றி, இவைகள்தாம் விதிகள் என்று எண்ணவேண்டா. இவைகளுக்கு மாறாக வழங்கப் பெற்றிருப்பனவும் இருக்கலாம்.

கம்பராமாயணம்:—பதவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு, முதலியவைகளுடன் ஸ்ரீ. வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார், சே. கிருஷ்ணமாசாரியார், வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியாரவர்களால் பதிப்பிக்கப்பெற்றவை. பால காண்டம் ரூ. 5. அயோத்தியா காண்டம் ரூ. 5. ஆரணிய காண்டம் ரூ. 4. கிஷ்கிந்தா காண்டம் ரூ. 4-8-0. சுந்தர காண்டம் ரூ. 5. யுத்த காண்டம் 2-பாகம் ரூ. 10. தபால் செலவு வேறு.
கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை.

# தமிழ் வேதக் கடலமுதம்.

[9-வது பக்கத் தொடர்ச்சி]

ஆன்மாக்களுக்குப் பிரகிருதி ஸம்பந்தமும் பகவத் ஸம்பந்தமும் ஆகிய இரண்டு தொடர்புகளும் உள்ளனவென்று உரைக்கப்பட்டது. இவ்விரண்டு ஸம்பந்தங்களும் ஆன்மாக்களுக்கு எதனை விளைவிக்குமென்னில்; கேண்மின். 'கிட்டம்' என்பது ஒரு பொருள். அது, தன்னோடு சேர்ந்ததொரு மாணிக்கத்தை ஒளியறத் தின்று உருவழித்துத் தன்னைப் போலவே ஆக்குமென்பது உலகறிந்ததே. அது போலவே, பிரகிருதி ஸம்பந்தமானது "அந்நலத் தொண்பொருள்!' எனப்படுகின்ற ஆன்மாவின் சீர்மையை நோக்காமல் தன்னோடு அது ஒப்புப் பெறுமாறு ஞானத் திவலையும் அற்றதாம்படி தின்று அதற்கு ஸத்தையின்மையை விளைவிக்கும். குளவியானது ஏதேனுமொரு புழுவைக் கொண்டுவைத்து ஊதி அதனைத் தன்னோடு ஒற்றுமை பெற்றதாக்குமென்பது உலகின்கண் காணப்படுவதேயாம். அதுபோலே பகவத்ஸம்பந்தமானது, "பொருளல்லாத வென்னை" என்னும்படி ஞானலோபத்தாலே அவஸ்துவாய்க் கிடக்கின்ற ஆன்மாவின் சிறுமையை நோக்காமல் தன்னோடு ஒத்ததாம்படி செய்து ஸத்தாலாபத்தை விளைவிக்கும்.

இங்ஙனம் அநாதியாகச் சொல்லப்பட்ட பிரகிருதி ஸம்பந்தம் பகவத்ஸம்பந்தம் என்ற இவ்விரண்டுஸம்பந்தங்களும் ஆன்மாவுக்கு என்ஞான்று மழியாதனவாகவே யிருக்குமோ வென்னில்; பிரகிருதிஸம்பந்தமானது ஆன்மாவுக்கு ஸ்வரூப மன்றியே வந்தேறியாய் ஸர்வசக்திவாய்ந்த எம்பெருமானாலே ஒருநாளிலே அடியோடு அகற்றப்பட்டுக் கழிந்துபோய்விடுகையாலே "திருமாலே நானும் உனக்குப் பழவடியேன்" என்னும்படி அநாதியாயிருக்கின்ற சேஷ சேஷித்வ ரூபமான பகவத்ஸம்பந்த மொன்றே "உன்றன்னோடு உறவேல் நமக்கு இங்கொழிக்க வொழியாது" என்று ஆண்டாள் அருளிச்செய்தபடியே ஒருநாளுங் கழிக்கப் போகாதது. பிரகிருதி ஸம்பந்தமானது வந்தேறியாயும் கருமமடியானதாயும் இருக்கையாலே அநித்தியமா யிருக்கும். பகவத் ஸம்பந்தம் அப்படி யல்லாமல் அநாதியாய் ஒரு உபாதியைப்பற்ற வந்ததன்றியே யிருத்தலால் நித்தியமாக இருக்கும் என்றதாயிற்று. ஆனால் வந்தேறியான பிரகிருதிஸம்பந்தத்தை அநாதி யென்று சொல்லுவானேன்? எனின்—வந்து ஏறின காலத்திற்கு அடி தெரியாமையாலே அநாதி யென்று பிரமாணங்கள் சொல்லுகையாலேசொல்லுகின்றோம். அடிதெரியாதபோது வந்தேறியென்று எங்ஙனங் கூறலா மெனின்; ஒருநாள் வரையிலே எம்பெருமானருளால் அது கழியக் காண்கையாலே வந்தேறியென்பது நிச்சயிக்கப்படத் தட்டில்லை யென்ப.

எம்பெருமானுக்கு இங்ஙனேயுள்ள நாராயணத்வ ப்ரயுக்தமான குடல் துடக்குத்தான் ஸத்வ ரஜஸ் தமஸ்ஸுக்களாகிற முக்குணங்களுக்கும் வசப்பட்டொழுகுகின்ற சேதநர்களை இலக்காகக் கொண்ட வேத சாஸ்திரங்களை வெளியிட்டருளுதற்குக் காரணமாயிற்று. ராஜஸராயும் தாமஸராயும் ஸாத்விகராயுமுள்ள சேதநர்களின் ருசிக்குத் தக்கபடியே பலன்களையும் அவைகளைப் பெறும் வழிகளையும் பூர்வகாண்டத்தாலே வேதம் பரக்கச்சொல்லுதலால் "த்ரைகுண்ய விஷயா:வேதா:" என்று பகவத்கீதையிற்சொல்லாயிற்று.

எம்பெருமான் ஒழிக்கவொண்ணாத உறவே காரணமாகச் சாஸ்திரங்களைக் கொடுத்தருளினன் ஆகில் நல்வீடு பெறுதற்கு ஏற்ற சாஸ்திரங்களை மாத்திரமே காட்டவேண்டியிருக்க, இஹலோக போகங்களுக்கும் பரலோக போகங்களுக்கும் சாதனங்கள் ஆனவற்றை விதித்து, ஸம்ஸாரபந்தத்திற்குக் காரணமான சாஸ்திரங்களையுங் காட்டினது ஏன் என வினவில்; வாத்ஸல்யத்தோடு கூடின பெற்ற தாயானவள் தன்பிள்ளை மண்ணைத் தின்ன விரும்பிற்றென்றால் அதன்முகங் கன்றாமல் முந்துற மண்ணைத்தின்னவிட்டுப் பின்னை அதற்கு மாற்று மருந்துகளைக்கொடுப்பதுபோல, எவ்வுயிர்க்குந் தாயோனை எம்பெருமானும் சேதநருடைய ருசிகளுக்குத் தக்கவாறு பந்தக சாஸ்திரங்களையுங் காட்டிவைத்துப் பிறகு பந்தமறுப்பதோர் மருந்தான சாஸ்திரங்களையுங் காட்டிவைத்தனன். ஸம்பந்த மடியான வாத்ஸல்யத்தினால் இப்படிச் செய்கையாலே ஸம்பந்தக் கொத்தை வாராதென்க.

இப்படி எம்பெருமான் வாத்ஸல்யத்தாலே செய்தருளினனாயினும் முக்குணங்கட்கும் வசப்பட்ட சேதனர்களினது ருசிக்கு இணங்கின பலன்களையும் ஸாதனங்களையும் விதிக்கின்ற பந்தக சாஸ்திரங்களையுங் காட்டிவைத்தால் அவர்கள் ஸம்ஸாரிகளாகவே ஒழிந்துபோகக் காரணமாகாதோ வென்னின்;—ஆகாது. அதுவும் நாளடைவிலே சேதனர்கள் ஈடேறுகைக்கே இட்ட வழியாகும். எங்ஙனே யென்னின்; ஒருவனைக் கொலைசெய்கின்ற வழிகள், ஸ்வர்க்க போகத்திற்குப் போகின்றவழிகள் முதலானவற்றைக் காட்டும் சாஸ்திரங்களேயல்லவோ பந்தகசாஸ்திரங்களெனப்படும்; இப்படிப்பட்ட சாஸ்திரங்களையும் எம்பெருமான்காட்டிவைத்திருப்பதற்குப் பயன் யாதெனக் கேண்மின்; தமோகுணம் மிக்கவர்களாய்ப் பொருளீட்டுகைக்குப் மற்றவரை நலிந்து திரிதலே தம் போதுபோக்காயிருக்கின்ற நாஸ்திகரைக் குறித்து,முதலிலே மோக்ஷத்தை விதித்தால் அவர்கட்கு அது ருசிகரமாக இருக்கமாட்டாதாகையாலே அன்னவர்கட்கு உத்தேச்யமாகவுள்ள பரஹிம்ஸைக்கு உபாயமான அபிசாரயாக கருமத்தைச் சில வேதவாக்கியங்கள் விதித்தன. பகைவரைக் கொன்றொழித்துத் தீர்வதற்கு என்ன வுபாயமென்று பார்த்துக்கொண்டிருந்த அவர்கள் ஒரு வழியாலும் அது நிறைவேறக் காணமையாலே அதன்பின் "ஏதோ சிலர் சாஸ்திரமென்று சொல்லிக்கொண்டிருக்கின்றார்களே, அந்தச் சாஸ்திரத்தில் என்னவுபாயம் சொல்லியிருக்கின்றதோ அதையேனு மினி அனுட்டித்துப் பார்ப்போம்" என நினைத்து அந்த அபிசார யாக கருமத்தை அனுட்டிக்க, அதன்படி பலன் கைபுகுகையாலே "சாஸ்திரம் உண்டு" என்கிற நம்பிக்கை அவர்கட்குப் பிறக்கின்றது. அப்படி ஆஸ்திகத்வம் உண்டான பின்னர், "சாஸ்திரங்கள் சொல்லுகின்ற விஷயம் உண்மையாகவே யிருக்கின்றதே, நாம் இப்படிப் பரஹிம்ஸை பண்ணிப்பண்ணி இஹலோக இன்பங்களை நண்ணி ஜீவிப்பதைக்காட்டிலும்இதனினும் பலபடி இனிதான மேலுலக இன்பங்களைப் பெற்று வாழலாமே" என்ற ஆசையை உண்டாக்கவல்ல ஸ்வர்க்கஸாதன-ஜ்யோதிஷ்டோமாதி யாக விதிகளிற் கண்வைத்து ஸ்வர்க்கம்



முதலிய புருஷார்த்தங்களையும்அவற்றிற்கு உரிய உபாயங்களையும்ஆராயப்புக,அவ்வழியாலே 'தேஹத்தைக் காட்டிலும் வேறுபட்டதான ஆன்மவஸ்து உண்டு' என்கிற விவேகம் உதிக்கின்றது. இத்தகைய விவேகம் உதித்த பின்பு, 'புண்ணியம் முடிந்தவாறே கீழேவிழ வேண்டியதாய் அநித்தியமான ஸ்வர்க்க புருஷார்த்தத்தைப் பெற்றுத் துன்பங் கலந்த இன்பத்தை யனுபவித்து மீள்வதிற்காட்டிலும் இன்பமயமான சாச்வத புருஷார்த்தத்தைப் பெற்று நிலைநின்று வாழலாமே", என்கிறஆசையை உண்டாக்கவல்ல [ஆத்மபோகமாகின்ற கைவல்யமோக்ஷத்திற்குவழிகாட்டியான] சாஸ்திரங்களிற் கண்வைத்து அவ்வழியாலே ஆத்மஸ்வரூபத்தின் விலக்ஷணத் தன்மையை உணர, பிறர்க்கு அடிமைப்பட்டிருத்தல் தகாது என்பதான அந்ய சேஷத்வ நிவ்ருத்தி பிறக்கின்றது. அதற்குப் பிறகு, கேவலம் தன்னைத்தானே அனுபவிப்பதாகிற அதனைக் காட்டிலும் மிகவும் விலக்ஷணமான பரமாத்ம போகத்தைக் காட்டுகின்ற சாஸ்திரங்களிற் கண்வைத்து அதன் சீர்மையையும் அதற்கு ஸாதனமான பக்தியையும் ஆராய்ச்சி செய்ய, அவ்வழியாலே, தனக்குச் சிறிதும் ஸ்வாதந்திரிய மில்லை யென்கின்ற பிரதிபத்தியுண்டாகின்றது. அதற்குப் பிறகு, பத்திமுதலா மவற்றில் பதி கூடாமல் தளரும் அளவில், தன் முயற்சியை அடியோடு நீக்குதலாகின்றப்ரபத்தியைக் காட்டுகின்ற சாஸ்திரங்களிற் கண்வைக்க, ஸ்வரூபத்தின் உண்மை நிலையாகிய பாரதந்திரியம் ஸித்தித்த தாகின்றது. ஆக இங்ஙனம்படிப்படியாக ஈடேறுகைக்கு இட்டவழியேயாம் சாஸ்திரங்கள்.

இப்படி எம்பெருமான் நீர்மையினால்அருள்செய்த கலைகளில் பிரதிபாதிக்கப்படுகின்ற விஷயங்கள் எல்லையில்லாதவை. அந்த விஷயங்களை நிரூபிக்கப் புகுவோமாயின் ஒவ்வொரு விஷயமும் நான்கு நான்கு வகையாயிருக்கும். எங்ஙனே யென்னின்; தேவசரீரமென்றும் மனுஷ்ய சரீரமென்றும் பசுபக்ஷியாதி திர்யக் சரீரமென்றும் ஸ்தாவர சரீரமென்றும் தேஹம் இப்படி நான்குவகைப்படும். பிராமண க்ஷத்திரிய வைச்ய சூத்ர ரூபத்தாலே வருணம் நான்கு வகைப்படும். அன்னவாறே, பின்னரும், பிரமசரியம், கார்ஹஸ்தியம், வாநப்ரஸ்தம், ஸந்நியாஸம் என ஆச்ரமம் நான்கு வகைப்படும் "சதுர்விதா: பஜந்தே மாம் ஜநாஸ் ஸுக்ருதிநோர்ஜுந ஆர்த்தோ ஜிஜ்ஞா ஸுரர்த்தார்த்தீ ஜ்ஞாநீ ச பரதர்ஷப!" என்று பகவத் கீதையிற் சொல்லியிருக்கின்றபடியே - புதிதாகச் செல்வத்தை விரும்புதல், இழந்த செல்வத்தை விரும்புதல், கைவல்ய மோக்ஷத்தை விரும்புதல், பரமபதத்தை விரும்புதல் ஆகின்ற அதிகாரங்கள் நால்வகைப்படும். அறம் பொருள் இன்பம் வீடு எனப் புருஷார்த்தங்கள் நால்வகைப்படும். ஸாலோக்கியம் ஸாமீப்யம் ஸாரூப்யம் ஸாயுஜ்யம் என மோக்ஷம் நால்வகைப்படும். கருமம் ஞானம் பக்தி பிரபத்தி என மோக்ஷோபாயம் நால்வகைப்படும். பஞ்சாக்நி வித்யையிற் சொல்லுகிறபடியே, கர்ப்ப கதி, யமலோக கதி, தூமாதி கதி, அர்ச்சிராதி கதி எனக் கதிகள் நான்கு வகைப்படும். கிருதம், த்ரேதா, துவாபரம், கலி என யுகங்கள் நால்வகைப்படும். தியானித்தல், யாகஞ் செய்தல், அர்ச்சனை செய்தல், நாமஸங்கீர்த்தனஞ் செய்தல் என யுகதருமங்கள் நால்வகைப்படும். வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்த ரூபத்தாலே வியூஹம் நால்வகைப்படும். நான்குயுகங்களிலும் "பாலினீர்மை செம்பொனீர்மை பாசியின் பசும்புறம் போலு நீர்மை பொற்புடைத் தடத்துவண்டு விண்டுலா நீலநீர்மை" என்று சொல்லுகிற பால் பொன் பசுப்புக் கார்வண்ணம் நான்கு. ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், மோக்ஷமளித்தல் என எம்பெருமானது செயல்கள் நான்கு. ஆக இப்படி நான்கு நான்கு வகைகளாக வகுக்கப்பட்ட அர்த்த விசேஷங்களை யெல்லாம் விரிவாக விளக்குவதற்கே சாஸ்திரங்கள் ஏற்பட்டன.

# ஷேக்ஸ்ப்பியர் நாடகக் காட்சித் திரட்டு

[55-வது பக்கத் தொடர்ச்சி]

## 1. ஜான் அரசர்

### தாய்மையுங் கைம்மையுந் தழுவி நின்றவள்.

துன்பமென்பது ஓர் ஏந்திழை வடிவமெய்தித் தன் பொன்னனைய திருமேனி பொடியாடத் தரைமீதுவீற்றிருக்குமளவில், இக்கோலங் காண்பான் அரசர்கள் அனைவரும் அவ்வயின் வந்து கூடினர். பிலிப்பு அரசன் தன் மகன் திருமணங்கொண்ட வந்நாளே நன்னாளெனக் கூறுதலும், அம்மொழிகள் செவிப்படா முன்னர்க் கான்ஸ்டன்ஸ் கட்செவி யெனக் கனன்று சீறி, நன்மையொன்றுஞ் செய்யப்படாமல், உண்மைதவறி வாக்குறுதி பிறழப்பெற்ற வந்நாள் தீயநாளாதலால், அதனிற்செய்த கருமங்கள் நன்மை பயக்கா தொழிகவென்றாள்.

**பிலிப்பரசன்:**—அம்ம! நீ யங்ஙன மிந்நாட் செயல்களைச் சபிப்பதற்குக் காரணம் நேர்ந்திடாது. நானுனக் கென்னரசவாணையைத் தந்திருக்கவில்லையோ?

**கான்ஸ்:**—நீ யெனக்குப் பொய்யுடை நாணயம் போன்றவோர் போலி யரசத்தன்மையே காட்டி வஞ்சித்தாய். உறையிட்டு நோக்குங்கால் அது விலையற்றதாய்க் காண்கின்றது. இறைமுறை பிழைத்தாய்! இறைமுறை பிழைத்தாய்! நீ யெனது பகைவர்தம் புண்படு செந்நீர் சிந்தப் படைக்கலமேந்திக் கைகலக்க வந்தாயேயாயினு மிப்போது அவருடன் கைகோத்து உறவாடுகின்றாய். போரெனப் பொங்கிய நின் மறமும் அதனாலெழுந்த உரமும் போய்த் தண்ணெனத் தணிந்த உறவும், வெளிக்குப் போர்க்கோலங்கொண்ட இணக்கமும் இப்போது [1] உலவுகின்றன. என்னையும் எனது மகனையும் அடக்குமொரு உள்ளக் கருத்தே யுங்களை ஒன்றாய்ச் சேரச் செய்தது. இறைவா! இறைவா! சொன்னசொற் பிறழுமிந்த மன்னவர்க் கெதிராய்க் கொடும்போர் புரியப் படைகொண்டெழாயோ? கைம்பெண் ஒருத்தி கலங்கியாற்றுகின்றாள்; ஈசனே! நீயே எனக்குரிய கணவனாவாய். தெய்வமில்லாத விந்நாள் அமைதிவாய்ந்த நாழிகைகளால் கழியாதிருக்கும்படி செய். எழுந்த ஞாயிறு விழுவதன்முன் வாய்மை யிழந்த இவ்வரசர்களுக்குள் படைகொண் டிகலும் பெருங்கலகம்

(1) உண்மையில் சமாதானம் கொண்டுள்ளநீர், வெளியில் பார்ப்பதற்குப் போர்புரிபவர்போல் பொய்யே போர்க்கோலம் பூண்டிருக்கின்றீர்.

விளைவிப்பாய். என் முறையீட்டைக் கேட்டருள்! ஓ! என் முறையீட்டைக் கேட்டருள்!

துச்சாதனன் துகிலுரிந்தநாள் செயலற்றுநின்றதன் கணவர் ஐவரால் கைவிடப்பட்ட காரிகை கதறியழுதும் அவளுக்குக் கருணை செய்த கடவுள் இவளுக்கும் இரங்கிக் கடைக்கண்ணோட்டினான் போன்று இவள் எண்ணமீடேற இவர்களிடையே போப்பின் தூதனும் பாண்டல்பை யனுப்பினார். அவனால் அவ்வரசர்களுக்குள் முன்னிருந்த உறவும் ஒற்றுமையும் நீங்கிக் கதிரவன் சாயும்முன்னரே போரும் மூண்டுவிட்டது. அந்தப்போரில்ஆர்தர் சிறைப்பட்டதையும், அவனைஜான், ஹ்யூபர்ட்டுடன் இங்கிலாந்திற்கு அனுப்பினதையும் முன்புகண்டோம். பிரெஞ்சரசனது பாசறையில் பிலிப், லூயி, பாண்டல்ப் முதலியோர்கூடித் தங்கள்தோல்வியை நினைந்து வருந்துங்காலை, துன்பத்தால் அலைக்கப்பட்டு உருமாறி முன்னிருந்தகோபம் தாபமாய்த் திரிந்த கான்ஸ்டன்ஸ் அங்குவந் தடைந்தாள்.

---

அங்கம் 3. காட்சி 4.

பிலிப்:—அதோ வருகின்ற அவள் யாரெனக் காணுங்கள். ஒரு ஆன்மாவுக்குக் கல்லறை: தன் விருப்பத்திற்குமாறாக, அழியா ஆன்மாவை நொறுங்குண்ட உயிரின் வன்சிறையில் [1] அடைத்துப் பிடித்தலவுகின்றவள். (அவளை நோக்கி) அம்ம! என்னுடன் செல்வாய்.

கான்ஸ்:—இதோ பாருங்கள்! இப்போது உங்களுடைய இணக்கத்தின் பயன் இன்னதெனப் பாருங்கள் [2].

பிலிப்:—நல்லவென்னம்ம! பொறுப்பாய்! மாதரியக் கான்ஸ்டன்ஸ், சமாதானங்கொள்.

கான்ஸ்:—இல்லை. எல்லா நற்போதனைகளையும், எல்லாக் கைம்மாறுகளையும் நான் எள்ளுகின்றேன். நற்போதனைகளை முடியச்செய்வதும், உண்மையான கைம்மாறுமாகிய இறப்பையே, இறப்பையே நாடுகின்றேன். ஓ அன்புள்ள, அழகுள்ள மரணமே! மணங்கொண்ட துர்நாற்றமே! அழுகிய வைரமே [3], செழித்தோங்குகையின் வெறுப்பே! அதன் அச்சமே! [4] உலவாத நின் அந்தகாரச் சேக்கையைவிட்டெழுந்திரு! அப்போது வெறுக்கத்தக்க உனது எலும்பை நான் முத்தமிடுவேன்; குழிந்தாழ்ந்த உன்புருவத்திடை என்கண்களை வைப்பேன்; உனது இல்லத்து உறைகின்ற புழுக்களை என் கைவிரல்கட்கு மோதிரமா யணிவேன்; மூச்சு ஓடும் வாயிலை வெறுப்புறு மண்கொண்டு அடைத்து உன்னைப்போன்ற பிணந்தின்னிப் பேயாவேன். வா! என்னைக் கண்டு பல்லிளி; நீ என்னைக் கண்டு புன்னகை புரிந்தாயென எண்ணிஉன்னைச்சூழ்ந்து உன் மனைவியென மூசுவேன் [5]. அருந்துயருற்றவர் காதல, ஓ என்னிடம் வருவாய்!

பிலிப்:—வனப்புடைத் துயரே! வாளாவிரு.

கான்ஸ்:—இரேன்! இரேன். அரற்ற மூச்சுள்ளளவும் வாளா விரேன். என் நா இடியின்வாயி லிருக்கலாகாதா. அப்போது முனிவோடுலகத்தை அதிரச் செய்வேன். அதுகொண்டு, ஒரு மெல்லியலின் மெலிந்த குரலைக் கேளாது, சாதாரண வேண்டுகோளை யிகழும் அச்சந்தரு எலும்புக்கூட்டைத் [6] தூக்கத்தினின்றும் எழுப்புவேன்.

பாண்டல்ப்:—தையால்! நீ தோற்றுவிப்பது பைத்தியமே யன்றித் துன்பமன்று.

கான்ஸ்:—என்னை இவ்வாறு பொய்செய்த நீ ஒருபோதும் புனிதனல்லை. [7] எனக்குப் பைத்தியம் பிடித்தில்லை. இதோ பிடுங்கும் தலைமயிர் என்னுடையதே. என்பெயர் கான்ஸ்டன்ஸ்; நான் ஜெப்ரியின் மனைவியா யிருந்தேன். இளைஞனான ஆர்தர் என் மகன். அவனை இழந்துவிட்டேன். எனக்குப் பைத்தியம்பிடித்திருக்கச்செய்யலாகாதோ? அங்ஙனமேயாயின் என்னை மறந்திருப்பேனே. ஓ! அது கூடுமானால் எத்துணைத் துன்பத்தை மறந்திருப்பேன். பாதிரிகளுள் உயர்பதவி பெற்றோய்! எனக்குப் பித்தம் பிடிக்கும்வகை ஒரு தத்துவத்தை உபதேசி; அப்போது ஜீவன்முக்தர்களுள் வைத்து எண்ணப்படுவாய். பித்தம் பிடித்த ஒருபேதையாய் இராமல் துக்க வுணர்ச்சியை அறிந்திருப்பதால் உடலின் அறிவுள்ள பாகம் அறிவை யூட்டி, இத்துயரினின்றும் நான் நீங்கும்வழி இன்னதெனக் காட்டி, என்னைக் கொன்றுகொள்ளவோ அல்லது தூக்கிலிட்டுக்கொள்ளவோ கற்பிக்கின்றது. நான் பித்தங்கொண்டிருந்தேனானால் என் பிள்ளையை மறந்திருப்பேன்; அல்லது கந்தைப்பொம்மையைப் பிள்ளையென்று கருதிப் பித்துக்கொள்வேன்; எனக்குப் பைத்தியம் இல்லை. ஒவ்வொரு இடுக்கணின் கொடுமையையும் நன்றாய் உணர்கின்றேனே.

---

(1) உடல். (2) அரசர்களுடையசமாதானத்தின் பயனால் ஆர்தர் சிறைப்படவில்லை; அவர்களுக்குள் நேரிட்ட சண்டையின் பயனால்தான் அவன் சிறைப்பட்டது. சித்தந்திரிந்த இவள் மற்றைய பெண்பாலாரோடொப்பத் தன் துன்பங்கள்தான் விரும்பாத ஒன்றைப் பிறர் செய்தலால் தான் வந்ததென்கிறாள். இது உலக வியல்பு.

(3) துர்நாற்றம் மணங்கொண்டிருத்தலும், வைரமானது அழுகலும் முரண்தொடர்கள். மரணமானது, அழகும் அன்பும் கொண்டிருந்ததென்பதும், மற்றும் அவள் சொல்வனவும், அவள் நிலைமைக்கு இணங்க, கொடியனவும் நல்லனபோல அவளுக்குத் தோன்றின என்பதைக் குறிப்பிடுகின்றன.

(4) உலகத்தில் செழித்து மேம்பாடடைய விரும்புகின்றவர்களுக்கு வெறுப்பையும் அச்சத்தையும்உண்டாக்குகின்றோய்.

(5) முத்தமிடுவேன் என்பதற்கு ஆங்கில மொழி Kiss என்பது. ஆனால் இங்கு உபயோகப் படுத்தப்பட்ட மொழி Buss என்பது. அது அழகிய சொல்லன்று; தாழ்ந்தோரால் உபயோகிக்கப்படுவது. அது முத்தத்தோடு சுவைத்தலையும் உணர்த்தும்.

(6) சாவை

(7) போப்பும் அவரைச் சேர்த்த பாதிரிமார்களனைவரும் புனிதரென் றெண்ணப்பட்டவர்.



# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

[72-வது பக்கத் தொடர்ச்சி]

6-ம் பத்து 4-ம் தசகம்.

1-ம் பாசுரம்

குரவையாய்ச்சியரோடுகோத்ததும்
குன்றமொன்றேந்தியது
முரவுநீர்ப்பொய்கைநாகம்காய்ந்தது
முட்படமற்றும்பல
அரவில்பள்ளிப்பிரான்றன்மாய
வினைகளையேயலற்றி
இரவுநன்பகலுந்தவிர்கில
மென்னகுறையெனக்கே.

உரை:—அரவில் பள்ளி பிரான்- ஆதிசேஷன்மேல் பள்ளிகொண்டிருக்கின்ற ஜகத் பிரபுவான பகவான், (இங்கு அவனின் ஸ்ரீ·கிருஷ்ணாவதாரச் செய்திகளைப் பேசுகிறபடி). குரவை - குரவையில் (இடைப்பெண்கள் மண்டலமிட்டுக் கைகள்கோத்து ஆடுகின்ற ஓர் கூத்து) ஆய்ச்சியரோடு - தான் நேசிக்கும் இடைப்பெண்களுடன் சேர்ந்து, கோத்ததும் - கைகள் கோத்து ராஜக்கிரீடைகள் செய்ததும், குன்றம் ஒன்று ஏந்தியதும் - இந்திரனுக்குப் படைத்த திருவிழாவில் வைத்திருந்த அடிசில் முதலியவற்றைக் கண்ணன் உண்ட நிமித்தத்தால் அவன் சீற்றம்கொண்டு மழையை ஏவியபோது அந்தக் காள வருஷத்திலிருந்து, கோவர்த்தனம் என்ற ஒருமலையைக் கையிலேந்திக் கோபாலர்களையும் பசுக்களையும் ரக்ஷித்ததும், உரவு நீர்ப் பொய்கை=யமுனா நதியின் மடுவில் இருந்த, நாகம் - காளிங்கன் என்ற மஹா ஸர்ப்பத்தை, காய்ந்ததும் - தம் திருவடிகளால் உதைத்துத் தொலைத்துத் திருக்கைகளால் அதன் தொண்டையைப்பிடித்துக் கிழித்து உயிரை மாய்த்ததும், உள்பட - அவன் இயற்றிய மற்ற எல்லா, மாய வினைகளையே - திவ்விய சேஷ்டிதங்களை மனதால் நினைத்து வாயால்ஆச்சரியத்தைவெளியிடுவதை இரவும்பகலும் எந்நேரமும் தவிர்கிலேன், என்ன மனக்குறைஎனக்கு இனி இருக்க வல்லது, ஒன்றுமில்லை.

விசேஷக் குறிப்பு:—5-ம் பத்து 9-ம் தசகத்தில், ஆழ்வார், அர்ச்சாவதார ஸேவையில் தனக்கு ஆபேக்ஷிதமானபடி பகவானின் கலவை ஏற்படவில்லையென்று ஸ்ரீ ராமன் கிருஷ்ணன் முதலான அவதார விசேஷங்களில் தன் மனதைச்செலுத்தி அவைகளில் பகவான் இயற்றிய ஆச்சரிய சேஷ்டிதங்களை அநுபவிக்க எத்தனித்ததை நாம் கண்டோம். ஆனாலும் "பிறந்தவாறு" என்னும் தசகத்தில், தான் எவ்வளவு முயன்றாலும், தன் மனம் எந்த ஒரு திவ்விய ஸம்பவித்தில் ஆழ்ந்தாலும், முழுவதும் தன் மனம் ஆறுதல் அடையும் வரையில் அதனில் ஊன்றி நிற்காமல் தளர்ந்துபடுவதால்எந்தஅவதார திவ்விய சரித்திரசம்பவங்களையும் ஒன்றன்பின் ஒன்றாய்த் தொடர்ந்துஅநுபவிக்க நான் வல்லேனாகவில்லையே என்று (அத்தசகத்தில்) ஒவ்வொரு பாசுரத்திலும் ஆழ்வார் நோவுபட்டதை நாம் கண்டோம். ஆதலால், பகவானைத் தன்னோடு கலக்கும்படி செய்யும்பொருட்டு இப்பத்தின் முதல் தசகமாகிய "வைகல் பூங்கழிவாய்" என்பதில் அவனுக்குத் தூதுவிட்டார். இதற்கு அவன் இசைந்து வாராததினால் "மின்னிடைமடவார்" என்னும் அத் தசகத்தில் சீற்றம்கொண்டு அவன் வந்தாலும் இனிக் "கலப்பேன் அல்லேன்" என்று நிச்சயிக்கவே, அவன் தானாய் மேல் விழுந்து வந்து தன் சேவடியைக்காட்டித் திருவிண்ணகருக்கு ஸகலவிதமான கலவைகளும் செய்யும்படி வரக் கூப்பிட்டபிறகு அங்கு அவன் வைபவத்தையும் உலக வியாபார நியமனத்தையும் இனிதுதேர்ந்து அவனது ஸௌலப்பியத்தில் ஊன்றி அவனது ஸௌந்தரியத்தில் ஈடுபட்டு மனமாரக் கலந்ததைநாம்கண்டோம். ஆனாலும், இந்தத் தசகத்தில் ஆழ்வார் மிகுந்த பிரீதியடைந்தவராய்த் தனக்குயாதொருமனக்குறையுமில்லை என்றும் தனக்குநிகர் வானத்திலும்கூடஇல்லையென்றும் களிப்புற்றுஉகக்கும்படி, தாம் "பிறந்தவாற்றில்' முன்புபட்ட மனநெகிழ்ச்சி இவரைவிட்டு நீங்கிற்றோ என்ற கேள்வி தோன்றுகின்றது. ஏனெனில் இந்தப் பத்தில் ஒருபாசுரம் நீங்கலாக மற்றெல்லாம்கிருஷ்ணாவதார திவ்விய சேஷ்டிதங்களை அநுபவிப்பதிலேயே ஆழ்ந்திருக்கின்றன. அது ஒவ்வொன்றிலும் மனம் ஊன்றிச் சந்தோஷம் நிறைவுபெற்றிருந்தாலொழிய ஆழ்வார் தம்மைநன்குமதித்துக்கொண்டு பகவானைப் புகழ்பாட வொண்ணாது. இதனை ஆறாயிரப்படி உரை நமக்கு விளக்கித் தருவதை இங்கு எழுதுவோம்:—

"திருவிண்ணகரில் எம்பெருமானைக் கண்டு அவனுடைய ஸர்வ நிபந்தரத்துவத்தையும், ஸௌசீலிய ஸௌந்திராயாதி கல்யாண குணங்களையனுபவித்து (a)மனமார ஆநந்தத்தை யடைந்த ஆழ்வாரைக்கண்டு (b)எம்பெருமான்பிரியாதானாய் "பிறந்தவாற்றில்" ஆழ்வாருக்குப் பிறந்த இழவெல்லாம் தீரும்படி தன்னுடைய திவ்வியாவதாரம் துடங்கித் திருநாட்டிற்கு எழுந்தருளுகை பரியந்தமாக நடுவுள்ள ஸர்வதிவ்விய சேஷ்டிதங்களையும் (c) காட்டியருளக் கண்டு (d) அவற்றை அநுபவித்து அதினாலே தமக்கு நிரவதிகப் பிரீதி உண்டாய் (e)பரிபூரண மனோரதன் ஆனேன்—என்கிறார்."

---

2-ம் பாசுரம்.

கேயத்தீங்குழலூதிற்றுநிரைமேய்த்ததுங்
கெண்டையொண்கண்
வாசப்பூங்குழற்பின்னைதோள்கள்
மணந்ததுமற்றும்பல
மாயக்கோலபிரான்றன்செய்கை
நினைந்துமனங்குழைந்து
நேயத்தோடுகழிந்தபோதெனக்
கெவ்வுலகநிகரே.

சிற்சில பத உரை:—கேயத் தீங்குழல் ஊதிற்றும் - ஆவின் நிரைமேய்க்க எப்படிப் புல்லாங்குழல் ஊதினாலும் அமையும்; கண்ணபிரான் ஊதுவது இராகம் தாளம் ஆலாபனம் மூர்ச்சை இவைகள் இல்லாமலிருக்குமோ! வெகு ரஸமாக அல்லவோ அவன் தன் நேயமான கோபிமார்கள் கேட்டு உவக்கும்படி ஊதுவான். இதுபற்றியல்லவோ "மின்னிடைமடவார்" என்ற தசகத்தில் பிரணயகலகப்பட்ட பிராட்டி "மணல்குன்றுகளில் காலிமேய்க்க வல்லாய்! அங்குப் போயிருந்து ஆய்ச்சியருக்கே நீஊதும் தீங்குழல் ஊது" என்று பரிஹசித்தாள். கேய-இசைப்பாட்டிற்குரிய விதிகளுக்கு

அடங்கியசாஸ்திரீயமான இராகவரிசை;நேயத்தோடு-வெகு சிநேகத்தோடு-இங்கு அத்தியந்த பக்தியோடு. கெண்டைக்கண்-கெண்டைமீன்கள்போன்றகண்களையுடைய நற்பின்னை பிராட்டி; மாயக்கோலப்பிரான் - ஆச்சரியமான அழகிய திருக்கோலத்துடன் விளங்கின மஹாசக்தியுள்ள பிரபு. எவ்வுலகம்நிகர் - எந்தஉலகத்தார் எனக்கு ஒப்பாகச் சொல்லக்கூடும் ? ஒருவரும் ஒப்பில்லை என்று பொருள்!

கருத்து:—ஆழ்வார், கிருஷ்ணபகவானுடைய லீலைகளிலும்திவ்வியஸௌந்திரியவடிவழகிலும் அவனின் ஆச்சரியசக்திகளிலும் பொழுதுகழித்து இன்பமடைகின்றேன்,என்கிறார். திருநாட்டிலுள்ளவர்கள் பகவானின் திவ்வியகுணங்களில் ஈடுபட்டுக் காலம்கழிப்பார். தானும் அப்படியே காலக்ஷேபம்செய்வதால் தனக்கு நிகர் திருநாட்டிலு மில்லை யென்கிறார்.

---

3-ம் பாசுரம்.

நிகரின்மல்லரைச்செற்றது
　　நிரைமேய்த்ததுநீணெடுங்கைச்
சிகரமாகளிறட்டதுமிவை
　　போல்வனவும்பிறவும்
புகர்கொள்சோதிப்பிரான்றன்
　　செய்கைநினைந்துபுலம்பி
நுகரவைகல்வைகப்பெற்றேனினி
　　யென்றுநோவதுவே.

உரை:—நிரை மேய்த்ததும் - பசுக்களைப் புல்லாந்தரைக்குக் கொண்டுமேய்த்ததும், எல்லாரும் ஸாமானியமானவருங்கூடச் செய்யக்கூடிய தொழிலைக் கிருஷ்ணபகவான்ஏற்றுச் செய்யவேணுமோ? பிறகு,ஏன் செய்யவேண்டி வந்ததென்றால்—கம்ஸன் கண்ணனை ஸாமான்னியமான இடைப்பய லென்று மோஹித்து அவனை இடையூற்றுக்கு ஆளாக்குகிறதை ஒழிக்கும் நிமித்தம், நிகரில் மல்லரைச் செற்றதும்-பலத்தில் தங்களுக்கு ஒப்புஇல்லாத சாணூர முஷ்டிகாதிகள் ஆன கைப்போர்த்தொழிலில் கைதேர்ந்தவர்களைத் தன்கை முஷ்டியால்தட்டிக்கொன்றதும், நீள்நெடும்கை-வெகு நீளமான துதிக்கையுடைய, சிகர - பர்வதம் போன்ற, மா-பெரிய, களிறு-குவலாயபீடமென்ற யானையைக் கம்ஸன் கண்ணன்மேல் ஏவ, அதைக் கொன்றதும், பிறவும் - இவைகளைப்போலச் சிறு பிராயத்திலேயே அத்தியந்த மாச்சரியமான வீரச்செயல்களை இயற்றியும், புகர்கொள்-ஜயவீரனென்ற யசஸு எங்கும் பரவிய,சோதிப்பிரான் - தனக்கே அஸாதாரனமான திவ்விய தேஜஸு விளங்கும் உலகப்பிரபுவின் செய்கையை நினைந்து, புலம்பி - இதனால் உண்டாகும் இன்பத்தை உள்ளடக்க முடியாமல் வாய்விட்டுச் சொல்லி, நுகர- அநுபவிக்க, வைகல் - தினம்தோறும், வைகப்பெற்றேன் -மேன்மேலும் அமையப் பெற்றேன். இடையீடின்றி இவைகளை இவ்வாறு அநுபவித்துக்கொண்டிருப்பது தவிரவேறேகாரியங்களில்லாதஎனக்கு, இனி- இதற்குமேல்,நோவு எதுவே-மனம் தாபமடையக்காரணம் எது உள்ளது? (எப்பொழுதும்இந்த ஆநந்தம் நீடித்து நடைபெறுவதால் எனக்குக் குறையொன்றுமில்லை யென்று அருளிச்செய்கிறார்.)

---

4-ம் பாசுரம்

நோவவாய்ச்சியுரலோடார்க்க
　　விரங்கிற்றும்வஞ்சப்பெண்ணைச்
சாவப்பாலுண்டதுமூர்சகட
　　மிறச்சாடியதுந்
தேவக்கோலப்பிரான்றன்செய்கை
　　நினைந்துமனங்குழைந்து
மேவக்காலங்கள்கூடினேனெனக்
　　கென்னினிவேண்டுவதே.

பதக்குறிப்புக்கள்:—ஆர்க்க - இறுகக்கட்ட, இரங்கிற்றும் - இரங்கினதும் - மனம் நோவுபட்டதும் - வஞ்சப்பெண் - கண்ணபிரானுக்குத் தாஹசாந்தியாக முலை உண்ணக் கொடுப்பவள்போல் வேஷம்போட்டு வந்த அரக்கிப்பெண்ணாகிய பூதனை என்பவள்,சாவப் பாலுண்டதும்-விஷம் கலந்த முலையை அவள்உயிரே மாயும்படி உண்டதும்; ஊர் சகடம் இற-தன்னைத்தானே ஊர்ந்துவரும் சகடம் உடைந்து பொடிய(சகடாஸுர வதத்தை அருளிச்செய்கிறபடி) மேவ - இப்பேர்ப்பட்ட செய்கைகளே ஆழ்வார் மனத்தின்கண் ஸதாஸர்வகாலமும் உலாவி நிலைத்திருக்க, காலங்கள் கூடினேன்-நேற்றைய ஒருபொழுது,இன்றைக்கு ஒரு பொழுது இவ்வண்ணம் ஒவ்வொரு பொழுதாய்க் காலவிபாகங்கள் கூடினேன்- காலங்களால் அடையக் கூடிய நற்பயனை (ஈட்டினேன்) நான் சேர்த்துக்கொண்டேன். இதைத்தான் பாகவதர்கள் “கால க்ஷேபம்” அதாவது காலத்தைப் பழுதுபோகாமல் நல்வழியில் செலுத்தி அதன் பயனை, பொருளை காப்பாற்றுவது போல், (க்ஷேமித்து) சேர்த்துக்கொள்ளுதல்” என்பார்கள். தேவக் கோலப்பிரான் - ஆழ்வார் மனத்தில் ஸ்ரீகிருஷ்ணன் மானிட வடிவாயினும் சுவயம்பிராகச சுத்தஸத்வ அப்பிராக்கிருத திவ்விய மங்களவிக்ரகமாக விளங்கினதாக நமக்கு அறிவிக்கின்றார். சென்ற பாசுரத்திலும் இவ்வண்ணமே அவர் புத்தியஸ்தமாகியிருந்ததாகச்“சோதி” என்ற பதத்தால்அருளிச்செய்கிறார்.

பொழிப்புரை:- உரலோடு கட்டிவைக்கும்படி ஆச்ரிதருக்குப் பரம சுலபனைபடியையும் அசுரபிரகிருதிகளுக்கு விரோதியாயும் பூதனை சகடாஸுரன் முதலியோரைத் தொலைத்து உயிர்மாய்த்ததையும் இது துடக்கமாயுள்ள திவ்விய சேஷ்டிதங்களைச் சிநேகத்தாலே யநுபவிக்கப்பெற்ற எனக்கு இனி வேண்டுவது உண்டோ, என்கிறார்.


# ஏமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

**செந்தமிழ்க்காதை.**

**கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0**




# மதுரைக் கோவை

[74-வது பக்கத் தொடர்ச்சி]

## மதியுடன் படுத்தல்

**பாங்கிமை நினைதல்**

வம்பே ரளக முலையுமை பாகர்
　　மதுரையன்னார்
தம்பே ரளியை விரும்புநெஞ் சேமுகத்
　　தாமரையில்
அம்பேர் விழிகொண் டவர்மலர்க் காவி
　　லறிவுறுத்தக்
கொம்பேநங் காதற் கொடிபடர்ந் தேறுங்
　　கொழுகொம்புமே. 75.

**புனங்கண்டு மகிழ்தல்**

கூனும் பிறைமுடி யார்சொக்க நாயகர்
　　கூடல்வெற்பில்
யானுந் தனியு மிருந்தழி யாமலென்
　　னெஞ்சுவண்டுங்
கானுஞ் சுழலுஞ் சுருளிரு ளோதியைக்
　　காணவைத்த
மானுந் தினையும் புனமுமன் றேவெம்மை
　　வாழ்வித்ததே. 76.

**கிள்ளைவாழ்த்து**

தேன்வாழு மாலைத் திருவால வாயர்
　　சிலம்பிலிந்தக்
கான்வாழ வாழும் புனத்தப லேவந்து
　　கைகலந்து
யான்வாழ் வதுபொருட் டாலிள மானையிங்
　　கெய்துவித்த
மான்வாழி கிள்ளை யினம்வாழி யேனலும்
　　வாழியவே. 77.

**புனத்திடைக் கண்டு மகிழ்தல்**

*தினைக்காவ லிந்தத் திருவைவைப் பாரந்தச்
　　செங்கமல
மனைக்கா ருளரென் றறிந்தல்ல வோவருள்
　　மாரிவெள்ளச்
சுனைக்காவி யங்கண்ணி தோய்வா ரழகிய
　　சொக்கர்வெற்பில்
வினைக்கா னவரறி விப்படி யோமுன்
　　விதித்ததுவே. 78.

**குறைகூறத் துணிதல்**

தோயவெள் ளந்துளும் புஞ்சடை யார்சொக்கர்
　　தொண்டர்பண்டைக்
காயவெள் ளங்கழற் றுங்கழ லாளர்
　　கடம்பவனத்
தாயவெள் ளஞ்சென் றணுகுமுன் னேயவ
　　ராருயிர்க்கென்
னேயவெள் ளஞ்சொல்லி நிற்பதென் றேபின்
　　னிலையெமக்கே. 79.

**ஊர் வினதல்**

சோருந் திருநதி சூடுஞ் சடாடவிச்
　　சொக்கர்வெற்பில்
வாருங் குவடும் பொருமுலை யீர்வந்து
　　வந்துநின்று
தேரும் பரியுந் தியங்காம லுங்கள்
　　திருமுன்றிலு
மூரும் பகரு மினிவினை யேனெஞ்
　　சொருப்படவே. 80.

* இச் செய்யுள் இலக்கணவிளக்க வுரையில் (பக்கம் 421) இத்துறைக்கே காட்டப்பெற்றுள்ளது.

**வழிவினதல்**

சுழியா மணிகொழிக் கும்வையை நாயகர்
　　சொக்கர்வெற்பில்
வழியா தெனவறி யேன்மட வீர்கனி
　　வாய்திறந்து
மொழியா துரைக்க முடியா தெனில்முகம்
　　பார்த்துமது
விழியா லுரைத்தரு ளீரிது போதும்
　　வினையனுக்கே. 81.

**பேர்வினதல்**

கோட்டைப் புறங்கண்டு வில்வேள் மகுடங்
　　குலைத்திடையை
வாட்டப் புகுதும் வனமுலை யீர்கொன்றை
　　மாலைதும்பை
சூட்டப் பொலிந்த சுடர்ச்சொக்கர் மால்வரைத்
　　தொல்லைநும்பேர்
கேட்டெத் தனையிரந் தேனுரை யீருங்கள்
　　கேண்மைநன்றே. 82.

**வேழம்வினதல்**

தூர்க்கடங் காதசெஞ் சாலிவண் கூடலஞ்
　　சொக்கர்வையை
நீர்க்கடங் காத கயல்விழி யீருங்க
　　ணீலமணி
வார்க்கடங் காத வனமுலை போலென்
　　வரிசிலையின்
போர்க்கடங் காவிபம் வந்ததுண் டோநும்
　　புனத்தயலே. 83.

**கலைவினதல்**

அருங்கலைச் சங்கத் தமிழால வாய
　　ரணிவரையின்
மருங்கலைக் குங்கொங்கை வல்லிநல் லீருங்கள்
　　வார்குழையை
யொருங்கலைக் குங்கண்கள் மான்பிணை யோவென
　　வோடியொரு
கருங்கலைக் கன்று புகுந்ததுண் டோவிக்
　　கடிபுனத்தே. 84.

**மொழிபெறது வருந்தல்**

கொன்னுடர் முத்தலை வேற்சொக்க நாயகர்
　　கூடல்வெற்பில்
மின்னு தரிக்கு மருங்குனல் லீரிந்த
　　வேதனையு
மென்னு தரவு நிலையுங்கண் டீர்நெஞ்
　　சிளகியொன்று
சொன்னு லினிச்சிந்து மோவுங்கள் வாயிற்
　　றுவர்முத்தமே. 85

**இடை வினதல்**

மன்றுகண் டாடு மதுரேசர் வெற்பில்
　　வளருமுலைக்
குன்றுகண் டாமிடை கண்டிலம் யாம்பொற்
　　குழைகுதித்துச்
சென்றுகண் டாருளங் கொண்டாளு மைக்கட்
　　டிருவனையீர்
ஒன்றுகண் டாலொன் றிலையென்ப தோவுங்க
　　ளுதியமே. 86.

199156
m 211, N 3&1: N
N3.4:7:6

மனம் வினுதல்

*கனம்வந் திறைஞ்சுங் கடம்பா டவியர்
கருணையென்னத்
தனம்வந் தரும்புஞ் சரிகுழ லீரென்
சரத்தொடுமோ
னினம்வந்த தோவந்த மான்பிணை தேடி
யிளைத்துமற்றென்
மனம்வந்த தோவுரை யீருங்கள் காவல்
மலிபுனத்தே. 87.

தோழி வினுவேதிர் மறுத்தல்

விழிக்கஞ் சனமல்ல மைக்காவி யோதியின்
மேல்முடித்துக்
கழிக்குந் தொடையல்ல கைவளை யோவல்ல
கங்கைவெள்ளஞ்
சுழிக்குஞ் சடாதரர் சொக்கர்வெற் பாளர்
சுழித்துமதங்
கொழிக்குங் கடாசல மெங்களுக் காவதென்
கூறுவதே. 88.

நகைந்துரை

கனங்காவல் கொண்ட கடம்பா டவிக்கறைக்
கண்டர்வெற்பில்
அனங்காள் பிணையிங்கு வந்ததென் பீரல்ல
காணுமிந்தப்
புனங்காவ லோவெமக் கித்தழை யாலெய்து
போம்பிணைமா
னினங்காவ லோவண்ண லேயெங்கள் காவ
லியப்புகவே. 89.

கையுறை காட்டல்

மழையா தரிக்க வளர்பொங்கர் சூழ்மது
ரேசரிளங்
கழையா தரித்தபொற் ருளுமை பாகர்
கடம்பவனத்
துழையா தரிக்குந் நடங்கணல் லீரினி
யோவிடுந்தண்
டழையாகு மிந்தத் தழையிது வேபதஞ்
சாற்றுதற்கே. 90.

கருத்தறிவித்தல்

முருந்துண்ட மூரலம் பானல்பொ ருகை
முழுதுமன்று
விருந்துண் டழைப்பவர் வெள்ளிமன் றுளர்
வியன்சிலம்பில்
அருந்தொண்டை வாய்மட வீர்வண்டல் மாளிகைக்
காமவிருந்
திருந்துண்டு போமென்கி லீரிது வோவுங்க
ளில்லறமே. 91.

துறை கூறல்

அரம்பார்த்த வேல்விழி யீர்கழங் காடுகைக்
காகமுத்தந்
தரம்பார்க்க வோவண்டல் தானிழைக் கோசர
ணென்பவர்க்கு
வரம்பார்த்த சொக்கர் மதுரேசர் வெற்பிலென்
மாதவத்தால்
நிரம்பாப் பணியுமக் கேததற் கேசென்று
நேர்படவே. 92.

* இச் செய்யுள் இலக்கணவிளக்க வுரையில் (பக்கம் 419) மாறெடு மனம்விஞதற்குக் காட்டப்பெற்றுள்ளது.

மதியுடன்படுத்தல் முற்றும்.

# ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை.

## காஞ்சீபுரம் ஸ்ரீ வரதராஜ ஸ்வாமி ஸ்தோத்திரங்கள்

[78-வது பக்கத் தொடர்ச்சி]

5. இராகம்—சங்கராபரணம்.] [தாளம்—ஆதி.

பல்லவி

ஈவரகு ஜூசினதி சாலதா - இங்க ஆரீதியா (ஈ)

அநுபல்லவி

பாவநமு ஸேயு சக்தி கணகனி - பாபமு கலதா கரிவரதா நந் (நீ)

சரணம்

1. ஸ்ரீசரணு ஸுகாஸந சயந ப - ரேச நீபத குஸேஸயார்ச்சனமு
நேஸேயக துராஸசே பவ - பாச பத்துடை காவிதாளநிநந் (நீ)
2. பரலோகபய விரஹிதுலைந - நருலு நாதுபை மரியஸஹியல
பரசின பாதலு தரமுகாகநீ - சரணயுகமுலனுஸ்ர ணைந்திநநந் (நீ)
3. நாக ஸதந கருடாரூடாக்ரு - பாகரநிந்நுவி நாயெவருநீ
வேகதியநி வேகமொரலநிடு - த்யாகராஜுநி ராகரஹித (ஈ)

பொருள்.

ஈவரகு ஜூசிநதி சாலதா - இதுவரைக்கும் பார்த்தது போதாதா? இங்க ஆ ரீதியா - இனியும் அதே மாதிரி தானு?

கரிவரதா - கரிவரதா! பாவநமு ஸேயு சக்திகி - பாவனம் செய்கின்ற (அதாவது பாவங்கள் முதலியவற்றைப் போக்கிப் பரிசுத்தம் செய்கின்ற) உன்னுடைய சக்திக்கு, அணகநி பாபமு கலதா - அடங்காத பாவமும் இருக்கின்றதா? நந்நு ஈவரகு ஜூசினதீ சாலதா - என்னை இதுவரையில் பார்த்து போதாதா?

ஸ்ரீசரணு -சிறந்த திருவடிகளையுடையவனே! ஸுகாஸன சயன - ஸுகமான (நாக) ஆஸனத்தில் சயனத்திருப்பவனே! பரேச - முழுமுதற் கடவுளே! நீ பதகுசேசய அர்ச்சனமு - உன் பாதகமலங்களுக்கு அர்ச்சனையை, நேஸேயக - நான் செய்யாமல், துராஸசே - துராசையினுல், பவபாஸ பத்துடை - பிறவி யென்னும் பாசத்தால் பிணிக்கப்பட்டவனுய், காவிதாளனி நன்னு - அலைச்சல் படமுடியாத என்னை, ஈவரகு ஜூசிநதீ சாலதா - இதுவரையில் பார்த்திருந்தது போதாதா?

பரலோகபய விரஹிதுலைந நருலு - பரலோக பயமே இல்லாத ஜனங்கள், நாதுபை - என்னிடத்திலே, மறி அஸஹயல - மிகுதியான பொருமையால், பரசின-செய்த, பாதலு தரமுகாக - வேதனைகளைப் பொறுக்கத் தரமில்லாமல், நீ சரண யுகமுலனு - உன்னுடைய இருதிருவடிகளிலே, சரணுஜொந்தின - அடைக்கலம் புகுந்துவிட்ட, நந்நு - என்னை, ஈவரகு ஜூசிநதீ சாலதா - இதுவரையில் பார்த்தது போதாதா?

நாகஸதந - (கரிகிரி என்னும்) மலையை வாசஸ்தானமாகக் கொண்டவனே! கருடாருடா - கருடனை வாகனமாக வுடையவனே! க்ருபாகர - கிருபைக்கு இருப்பிடமானவனே! ராகரஹித - பிரகிருதி சம்பந்த மில்லாதவனே! நிந்நுவிநா எவரு - எனக்கு உன்னையன்றி வேறு யார் இருக்கிறார்கள்? நீவே கதியனி - நீயே கதியென்று, வேக மொரலநிடு - அதிகம் முறையிடுகின்ற, த்யாகராஜுநி - தியாகராஜனை, (நீவு) ஈவரகு ஜூசிநதீ சாலதா - நீ இதுவரையில் பார்த்துக்கொண்டிருந்தது போதாதா?

### சங்கராபரண ராக லக்ஷணம்.

இது கர்த்தாராகம். ஸர்வ ஸ்வர ஸம்பூர்ண கமக வரிக ரக்தி ராகம். 72 மேளகர்த்தா ராக முறையில் 29-வது என்று இதற்கு எண் ஏற்படுவதற்கு (கடபயாதி ஸங்க்யை முறைக்கு ஒத்துவரும்படி) இதற்குத் "தீரசங்கராபரணம்" என்று பெயரிடப்பட்டிருக்கிறது. இதில் அவரோஹணத்தில் "ஸ்தாபமகரிஸ" என்ற பிரயோகம் அடிக்கடி காணப்பட்டாலும், இது சுத்தமான ஸம்பூர்ண ராகமேயாகும். "ஸாநீ பாம கா ரீ ஸா" என்பதுபோன்ற பிரயோகமும் வருவதுண்டு. அந்தர காந்தாரம் சுத்த மத்யமம், காகலீநிஷாதம்-இந்த ஸ்வரங்கள் இந்த ராகத்திற்கு முக்கிய சாயாஸ்வரங்கள். ஆரோஹணத்தில் சதுச்ருதி ரிஷபத்தையும் அந்தர காந்தாரத்தையும் சதுச்ருதி தைவதத்தையும் ஊன்றிப் பாடுவதனுல் இந்த ராகத்தின் களை நன்கு விளங்கும். ஸஸ ரிரி கக மம - என்பதுபோன்ற ஜண்டைஸ்வரப் பிரயோகங்களும், ரிநிஸ்த நிபதம பக மரி கஸ - என்பதுபோன்ற தாடுஸ்வரப் பிரயோகங்களும் மிக ரஞ்சகமானவை. மாலைக்காலத்தில் இந்த இராகம் பாடத்தக்கதென்று சிலர் அபிப்பிராயப் படுகின்றனராயினும், இது எப்போதும் பாடத்தகுந்ததே.

ஆரோஹணம்—ஸரிகமபதநிஸ்.

அவரோஹணம்—ஸ்நிதபமகரிஸ.

### ஸ்வர ஸாஹித்யம்.

ஸம்ஜ்ஞா விவரணம்

, — இது ஒரு களையைக் காட்டுகிறது.

; — இது இரண்டு களைகளைக் காட்டுகிறது.

| — இது தாளத்தின் மத்தியிலுள்ள தட்டுக்களைக் குறிப்பிடுகிறது.

|| — இது தாள ஆவர்த்த முடிவைக் காட்டுகிறது.

* — இது பாட்டுத் தொடங்கு மிடத்தைக் குறிப்பிடுகிறது.

ஸரிகம— பாட்டின் நடை எந்தக்காலத்தில் உள்ளதோ அதன் நடுவில் துரிதகால ஸங்கதி வருமிடங்களில் இவ்வாறு கீழ்க்கோடிடப்பட்டிருக்கும்.

ஸரிகம— மேற்படி ஸஜ்ஜையிற் கூறப்பட்டிருக்கும் துரிதகாலத்துக்கும் துரிதமான காலத்தை இந்த இரட்டைக் கீழ்க்கோடு குறிக்கும்.

பதநி—தடித்த எழுத்தில் உள்ள ஸ்வரங்கள் கீழ் ஸ்தாயியைக் குறிப்பிடும்.

ஸ்ரீகம—மேலே புள்ளியுள்ள ஸ்வரங்கள் மேல் ஸ்தாயியைக் குறிப்பிடும்.

[குறிப்பு—இந்தக் கீர்த்தனை மத்யம காலத்தில் பாடப்படவேண்டிய தோன்றும்.

ஆறு களைகள், அதாவது ஒன்றரை அக்ஷரம் தள்ளி எடுப்பு]

பல்லவி

| | | | |
|---|---|---|---|
| ; ; ; * கா மா - பா தா நீ | ஸ்ா ; ; - ஸ்ா | ஸ்ா - ஸ் நி தா பா | ‖ |
| ; ; ; * ஈ . - வ ர கு | ஜூ ; ; - சி | ன - தி . . சா | ‖ |
| கமப-மகரி * காமா-பா தா நீ | ஸ்ா ; ; - ஸ்நி | ஸ்ரி - ஸ்நி தாபா | ‖ |
| ல. . -தா. . * ஈ . . -வ. ர கு | ஜூ ; ; - சி . | ந . - தி . . சா | ‖ |
| கமப-மகரி * பமகா - மபதாநீ | ஸ்ா ; ; - ஸ்நி | ஸ்ரி - ஸ்நிதாபா | ‖ |
| லா ..- தா .. * ஈ . . - வ . ரகு | ஜூ ; ; - சி . | ந . - தி , . சா | ‖ |
| கமப-மகரி * பமகா - ம பதா நீ | ஸ்ரிக்ரிஸ்ா - ஸ்நி | ஸ்ரி - ஸ் நிதபா | ‖ |
| ல . . - தா . * ஈ . . - வ . ர கு | ஜூ . . . . - சி . | ந . - தி . . சா | ‖ |
| கமப - மகரி * நீ ரீஸா - தாநீ | ஸா ; ; - ஸரி | கம - பதநிஸ் - ரிஸ் | ‖ |
| லா .. - தா . . * இ . ங் . - கா . | . ; ; - ஆ . | . . - ரீ . . . - தி . | ‖ |

நித - பம கரி *
. . - யா . . * (ஈவரகு)

அநுபல்லவி

| | | | |
|---|---|---|---|
| ; ; ; * .ஸ்ா; நீ தா பா | ம க மா ; - கா | மா பா - தா நீ | ‖ |
| ; ; ; * பா ; வ ந மு | ஸே . ய ; - சக் | தி க - ணக | ‖ |
| ஸ்ா ; ; * ஸ்ா; நீதாபா | கமபமகரி - கா | மா பா - தா நீ | ‖ |
| நி ; ; * பா ; வநமு | ஸே .. ய .. - சக் | தி க - ணக | ‖ |
| ஸ்ா ; ; * ஸ்நிஸ்ரி - ஸ்நிதாபா | கமப மகரி - கா | மா பா - தா நீ | ‖ |
| நி ; ; * பா . . . - வ . நமு | ஸே .. ய . . - சக் | தி க - ணக | ‖ |
| ஸ்நிஸ்ரீஸ் * ஸ்ரீ க்ரீ ஸ்ா | ஸ்நிஸ்ா; - ஸ்நி | ஸ்ரி - ஸ்நிதாபா | ‖ |
| நி . . . . * பா . ப. மு | கலதா ; - க . | ரி . - வ . . ர | ‖ |

கமப - மகரி *
தா .. - நந் * (நீ வரகு)

சரணம்

| | | | |
|---|---|---|---|
| ; ; ; * பா; மா; மா | கா, மா, - கா | மா பா; மா | ‖ |
| ; ; ; * நா; க; ல | த, ன, - க | ரு டா; ரு | ‖ |
| தா ர; * ஸா; பா; மா | கமபமகரி - கா | மா பா; மா | ‖ |
| டாக்ரு * பா; க; ர | நி . ந . வி. - நா | . . ; எ | ‖ |
| பா பா பா * கா மா பா தா நீ | ஸா ; ; - ரிக் | மா - மக்க்ரிஸா | ‖ |
| வ ரு நீ * வே . க தி ய | ணி ; ; - வே. | க - மொ . ர . ல | ‖ |
| ஸநிஸா ; * ஸாஸா - ஸ்ரிதாபா | மகமபதநி - ஸா | ; பா ; - ஸ்ரி | ‖ |
| நி . டு ; * த்யாக - ரா . . . ஜூ | நி . . . . - ரா | ; க ; - ர . | ‖ |
| தப பமகரி * | | | |
| ஹி . த . . . * (ஈ வரகு) | | | |

# அப்பர்

## அப்பரும் அறுபத்து நான்கு கலைகளும்.—31. இதிகாசம்

[75-வது பக்கத் தொடர்ச்சி]

4. கந்தன் உருவ தத்துவமும் அருவ தத்துவமும்

சிவபெருமானை உருவத்திலும் அருவத்திலும் வழிபாடு செய்வதுபோல் முருகக் கடவுளின் வழிபாடும் மேலோர் இருவகையிலுஞ்செய்தனர். முன்னதாகிய சகுணோபாசனையில் அவர் திருவுருவ விவரம் பாதாதி கேசமாகவும் கேசாதிபாதமாகவும் எண்ணியெண்ணி அடியவர்களால் மனதிலும் வெளியிலும் கண்டு களிக்கப்படும். ஆகையால் அந்தத்திருவுருவம் ஒரே தன்மையதாய்க் காணப்படவேண்டும். ஒரு சமயம் ஒரு முகமாகவும் மற்றொரு சமயம் ஆறுமுகமாயும் இருக்கலாமென்னினும், சமானிய வழிபாட்டில் மாறுபாடிலாத மூர்த்தமே வேண்டுமாதலால், நமது முன்னோர் முருகக்கடவுளை ஒருமுக மூர்த்தியாய்வழிபட்டாரா அல்லது ஆறுமுக மூர்த்தியாய் வழிபட்டனரா என்பது அறிவது அவசியம்.

இவ்விடயத்தில், நமது சமய குரவர்களைக் காட்டிலும் மேலான சுருதியில்லை. அப்பர் விடந்தீர்த்த திருப்பதிகத்தின் 6-ம்பாசுரம் பின்வருமாறுகாணலாம்:—

ஆறுகொ லாமவ ரங்கம் படைத்தன
ஆறுகோ லாமவர் தம்மக ளுர்முகம்
ஆறுகொ லாமவர் தார்மிசை வண்டின்கால்
ஆறுகொ லாஞ்சுவை யாக்கின தாமே.

என்பதில் முருகக்கடவுளுக்குத் திருமுகங்கள் ஆறு என்பது தோன்றும். மற்றும்—

படைமலிந்த மழுவாளும் மானுந் தோன்றும்
பன்னிரண்டு கண்ணுடைய* பிள்ளை தோன்றும்
நடைமலிந்த விடையோடு கொடியுந் தோன்றும்
நான்மறையி னொலிதோன்றும் நயனந் தோன்றும்
உடைமலிந்த கோவணமுங் கீளுந் தோன்று
மூரல்வெண் சிரமாலை யுலாவித் தோன்றும்
புடைமலிந்த பூதத்தின் பொலிவு தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்கே.

—திருப்பூவணம்-திருத்தாண்டகம்-4.

என்னும் திருத்தாண்டக விருத்தத்தால், சிவபெருமான் உருவமாய்த் திகழும் முருகக் கடவுள் பன்னிரண்டு கண்களுடைய ஆறுமுகவரே யென்பதும் விளங்குகின்றது.

ஆகையால் கந்தனது திருவுருவம் திருக்கருணை நிறைந்து பன்னிரண்டு கண்களுடைய ஆறுமுகக் கடவுளாம். இம்முகங்களிற் றிகழ்வது மாறாத இளமையாகும். "இளங்குமரன்" என்றும் "குமரவேள்" என்றும் இதனால் இவர் கூறப்படுகின்றார். தொன்னாட் கிழவன் என்று சொல்லத்தக்க சிவபெருமான் குமரனையும் மகனாக வுடையார்போலும் என்பது காண்க:—

சமரம்மிகு சலந்தரன்போர் வேண்டி னானைச்
சக்கரத்தாற் பிளப்பித்த சதுரர் போலும்
நமனையொரு கால்குறைத்த நாதர் போலும்
நாரணனை யிடப்பாகத் தடைத்தார் போலும்
குமரனையும் மகனாக வுடையார் போலும்
குளிர்வீழி மிழலையமர் குழகர் போலும்
அமரர்கள்பின் அமுதுணநஞ் சுண்டார் போலும்
அடியேனை யாளுடைய வடிகள் தாமே

—திருவீழிமிழலைத் திருத்தாண்டகம் 2.

இவர் மார்பு புஜம் முதலிய அவயவங்கள் கடப்பம்பூ மாலைகளால் அணியப்பெற்றிருக்குமென்பதும், அது நற்காட்சியாமென்பதும் நாம் அறியலாம்:—

மாலன மாயன் றன்னை மகிழ்ந்தனர் விருத்த ராகும்
பாலனார் பசுபதியார் பால்வெள்ளை நீறு பூசிக்
காலனைக் காலாற் செற்றார் காஞ்சிமா நகர்த னுள்ளால்
ஏலநற் கடம்பன் றாதை யிலங்குமேற் றளிய னாரே.

—திருக்காஞ்சித் திருமேற்றளி - நேரிசை 2.

இத் திருவுருவ வனப்பை யெண்ணியே திருஞானசம்பந்தர்,

உற்றுமை சேர்வது மெய்யினையே யுணர்வது
நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே கனல்விழி
காய்வது காமனையே
அற்றமறைப்பது முன்பணியே யமரர்கள்
செய்வது முன்பணியே
பெற்றுமு கந்தது கந்தனையே பிரமபு
ரத்தையு கந்தனையே

என்று பாடினார். இத்தகைய திருமேனி வனப்பின் பேரில் கூரிலங்கு வேலாயுதம்* மாயச்சூர் அன்றறுத்த தன்மையை விளக்கு:—

காரிலங்கு திருவுருவத் தவற்கும் மற்றைக்
கமலத்திற் காரணற்கும் காட்சி யொண்ணாச்
சீரிலங்கு தழற்பிழம்பிற் சிவந்தார் போலும்
சிலைவளைவித் தவுணர்புரஞ் சிதைத்தார் போலும்
பாரிலங்கு புனலனல்கால் பரமா காசம்
பரிதிமதி சுருதியுமாய்ப் பரந்தார் போலுங்
கூரிலங்கு வேற்குமரன் தாதை போலும்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே.

—திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் திருத்தாண்டகம் 7.

இவ் வேலாயுதம் விளங்கும் திருத்தோளுக்கு ஒரு புறம் ஸ்ரீ வள்ளி நாயகியாரும்* மற்றொரு புறம் அமரர்கோன் புதல்வியும் ஒட்டி நிற்பார். இதனால் "அமரர்சேனைக்கு நாயகனானகுறவர்மங்கைதன்கேள்வன்" என வன்றொண்டர் பாடலாயினர். இத்தகைய அழகிய ரூபமாயினும், அஞ்ஞானமாகிய அந்தகாரத்தையோட்டிக் காமம்முதலிய மனோவிகாரங்களை யொழிக்கும்உருவமென்பது நமது சமயகுரவர்கள் ஆங்காங்குக்குறிப்பிடுகின்றனர். வன்றொண்டர், திருக்கலய நல்லூர்ப் பதிகத்தில், கிரௌஞ்சத்தின் சகாயம் பெற்ற தாருகன் உடலைச் சத்தியாகிய வேற்படை அழித்ததும், காமனைச் சிவபெருமான் தனது நெற்றிக்கண்ணாலழித்ததும் ஒப்பிடக்கூடியன வென்னுங்குறிப்பினோடு பின்வருமாறு பாடுதல் காண்க:—

போருய்பலம துடையசுரன் றாருகனைப் போருது [தன்
போர்றுவித்த பொருளினைமுன் படைத்துகந்த புனி
கரும்புவிலின் மலர்வாளிக் காமனுடல் வேவக்
கனல்விழித்த கண்ணுதலோன் கருதுமூர் வினவின்
இரும்புனல்வெண் டிரைபெருகி யேலமில வங்க [ல்
மிருகரையும் பொருதலைக்கு மரிசிலின்றென் கரைமே
கரும்புனைவெண் முத்தரும்பிப் பொன்மலர்ந்து பவளக்
கவின்காட்டுங் கடிபொழில்சூழ் கலயநல்லூர் காணே.

ஆறுமுகத்திற்கேற்பப்பன்னிரண்டு கைகளும், சாம்பூனத மென்னும்† நயமான தங்கத்தின் ஒளிவிடும் திருமேனியும் அடியார்மனங்கவரச்செய்யுமென்பதும், அந்நயப்புக்குத்தக்க¶ஊர்தியுடனும், வச்சிரவேலுடனும் முருகவேள் திகழ்வது இம்மைக்கும் மறுமைக்கும் இதத்தைக் கொடுத்து எல்லாப் பகையையும் ஒழிக்குமாறு நிற்கும் உருவமென்பது போலாம். இதை வன்றொண்டர் பதிகத்தில் செவ்வனே காணலாம்:—

பொன்னானை மயிலூர்தி முருகவேள் தாதை
பொடியாடு திருமேனி நெடுமாறன் முடிமேல்
தென்னானைக் குடபாலின் வடபாலின் குணபால்
சேராத சிந்தையான் செக்கர்வா னந்தி
அன்னானை யமரர்கடம் பெருமானைக் கருமானி
னுரியானை யதிகைமா நகருள்வாழ் பவனை
என்னானை யெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போலியானே

திருவதிகை வீரட்டானம்-பண்-கொல்லிகௌவாணம்-8.

இத்தகைய வர்ணனை நமது சமயகுரவர் கற்பனையன்று, தொன்று தொட்டு வேதங்களால் செய்யப்பட்டதேயாம். வால்மீகி ராமாயணத்தில் யுத்த காண்டத்தில் 106-வது சருக்கத்தில், நமது தமிழ்முனியாகிய அகத்தியர், இராமன் இராவணனுடன் சண்டைசெய்து சற்றுக்களைத்திருந்த சமயத்தில் யுத்தகளத்தில் வந்து தோன்றி இராவணனைச் செயிப்பதற்குத் தக்க வழியான ஆதித்தஹிருதயத்தை அவனுக்குஉபதேசித்தார் என்பதைக் காணலாம் ஆதித்த இருதயமாவது ஒருவகை இழுக்கும் சக்தி. நமது பூமியென்னும் உருண்ட பந்துக்குள் மத்தியத்தில் எப்படி (Gravity) கிராவிடி என்று ஆங்கிலத்தில் கூறப்படுகின்ற ஆகர்ஷண சக்தி அமைந்திருந்து சுற்றுமுள்ள எல்லாப் பொருளையும் தன்வசம் இழுக்குமோ அப்படியேசூரியலோக மத்தியில் பூமியின் சக்தியிலும் பல்லாயிரம் மடங்கு பெருத்ததோர் சக்தி தங்கியிருக்கின்றதென்பதும் அதனால் எல்லாக் கோளங்களும் அதைச் சுற்றுவதுடன் அதனிடமிருந்து எழும் கிரணங்களாலும் சக்தியாலும் ஒவ்வொரு கோளத்திலுள்ள சீவராசிகளின் இயக்கம் நடைபெறுகின்றதென்பதும் எல்லாத்தத்துவ சாஸ்திரிகளும் அறிந்தவிஷயமே. அச் சுவர்ணமயமான மண்டலத்திடையே சகல வஸ்துக்களையும் கிரஹித்துக்கொள்ளும் சக்தியால் ஆதித்தியன் என்னும் பெயர்பெற்ற அச்சக்தியை "சம்பு" (எங்கும் நேத்திரமுடையவர்; எங்கும்ஆநந்தத்தைக் கொடுக்கின்றவர்) என்றும், சத்துருக்களின் வீரியத்தை வற்றச் செய்வதால் ஸ்கந்தாவென்றும் சுப்ரமண்யாவென்றும் அவ்வாதித்திய இருதய தோத்திரம் கூறியதென்றும், திரிகரண சுத்தியாய் மூன்றுதரம் இராமன் அதைச் செபித்தவுடன் அளவற்றசக்தி பெற்றான் என்றும் வால்மீகி விளக்குவார்.

ஆகையால் கந்தன் திருவுருவமானது பொன்மயமாய்ப் பலகோடி சூரியர்கள் ஒருங்குசேர்ந்தாற்போல் ஒளி வீசிக்கொண்டு அன்பருக்கு மிகவும் குளிர்ந்தும் கருணையே வடிவாயும் திகழுமொரு பெரிதிற்குப்பெரிதாய உருவாம். அதுவே அருவாக அணுவுக் கணுவாய் அடியார்கள் இருதயத்திலும் விளங்கும்:—

உடம்பெனும் மனைய கத்து ளுள்ளமே தகளி யாக
மடம்படும் உணர்நெய் யட்டி யுயிரெனுந் திரிம யக்கி
இடம்படு ஞானத் தீயா லெரிகொள விருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காண லாமே.

அப்பர்—தனித்திருநேரிசை - 4.

[இத்தகைய நிலையில் விளங்குவது கடம்பமர் காளை தாதை திருவடி யென்றார். அக்காளையின் தன்மையை விளக்குந் தாதை யெனினும், காளையும் தாதையும் எனினும் பொருள் பொருந்தும்.]

* "பன்னிரண்டு கையுடைய" வென்பது மற்றொரு பாடம்.

* சமர சூரபன் மாவைத் தடிந்தவேற்
குமரன் தாதைநற் கோழம்பம் மேவிய
அமரர் கோவினுக் கன்புடைத் தொண்டர்கள்
அமர லோகம தாளுடை யார்களே.

—திருக்கோழம்பம் - திருக்குறுந்தொகை 10.

*(i) குறவிதோள் மணந்த செல்வக்
குமரவேள் தாதை யென்று
நறவிள நறுமென் கூந்தல்
நங்கையோர் பாகத் தானைப்
பிறவியை மாற்று வானைப்
பெருவேளூர் பேணி னானை
உறவினால் வல்ல னாகி
யுணருமா றுணர்த்து வேனே

—அப்பர் - திருப்பெருவேளூர் - திருநேரிசை 4.

(ii) வள்ளி முலைதோய் குமரன் தாதை வான்தோயும்
வெள்ளி மலைபோல் விடையொன் றுடையான் மேவுமூர்
தெள்ளி வருநீர் அரிசில் தென்பாற் சிறைவண்டும்
புள்ளும் மலிபூப் பொய்கை சூழ்ந்த புத்தூரே.

—சம்பந்தர் - திரிஅசிற்கரைப்புத்தூர்-பண்-காந்தாரம் 6.

† one of the Isotopes of gold.

¶ முன்னை யார்மயி லூர்தி முருகவேள்
தன்னை யாரெனில் தானோர் தலைமகன்
என்னை யாளுமி றையவ னெம்பிரான்
பின்னை யாரவர் பேரெயி லாளரே.

—திருப்பேரெயில் - திருக்குறுந்தொகை. 7.



ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
பி.டி.ச்யாவனப்ராசா பி.டி.பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கேட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) பி.டி.பி.மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
பி.டி.ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைசேர்ந்ததிற்றுமணக்கு எண்ணை காஸ்ட்ராலகஸ்
ஜ்வரேக் சகல எவ்வித ஜ்வரங்களுக்கும்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]
199156
m241,N28ICN

KALANILAYAM
REG. NO. M. 2324.

## வர்த்தமானம்

அரிசியில் **1000** வகை:—ஆசியாக்கண்டத்தில் மட்டும் மொத்தம் இரண்டாயிரம் வகை அரிசிகள் இருக்கின்றனவாம். கோயம்முத்தூர் விவசாயப் பண்ணையில் மட்டும் ஆயிரம் வகையான அரிசி உற்பத்தியாகிறதாம்.

* * *

ஜார்ஜ் மன்னருக்குப் பச்சை:—பச்சை குத்துவது அநாகரிகம் என்பார்கள். ஆனல் நமது ஜார்ஜமன்னர் கையில் ஒரு அழகான நெருப்பு நாகம் (டிராகன்) பச்சை குத்தியிருக்கிருர். இந்தப்பச்சை எப்பொழுது குத்தப்பட்டதென்பதுந் தெரிந்துகொள்ளக்கூடியதாயிருக்கின்றது. அவர் சிறுவராயிருந்தபோதுஒருமுறை ஜப்பானுக்குச் சென்ருர். அக்காலத்தில் அங்கு அந்த "டிராகன்" பச்சையை அழகாகக் குத்திக்கொண்டார்.

* * *

பெரிய மிருகக் காட்சிச் சாலை:—தென்னுப்பிரிக்கா டிரான்ஸ்வாலில் உள்ள மிருகக்காட்சிச் சாலையே உலகில் மிகப் பெரிதாம். இது 7776 சதுர மைல் உள்ள ஓர் பெரிய தோட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. 1000 யானைகள், 250 ஒட்டகங்கள் 800 காட்டெருமைகள், 500 சிங்கங்கள், இன்னும் 20000 பிராணிகளும் அங்கே யிருக்கின்றன. இக்காட்சிச் சாலையைச் சுற்றி 280 மைல் நீளத்திற்கு மோட்டார்ப்பாதைகள் போடப்பட்டிருக்கின்றன.

* * *

நாய்க்குச் சிலை:—டோக்கியோவில் சிடியா ஸ்டேஷனில் வருஷக்கணக்காகத் தனது எஜமானுக்காகக் காத்து நின்று ஒரு ரயில் விபத்தில் மாண்ட ஹச்சிகோ என்ற நாய்க்கு ஒரு சிலை ஏற்படுத்தப் போகிருர்கள். ஆயிரக்கணக்கானவர்கள் அந்த நாயைப் போய்ப்பார்த்து அதனை ஆதரிக்க முன் வந்தார்கள். ஆனல் அது அந்த இரயில் ஸ்டேஷனைவிட்டு நகரமறுத்துவிட்டது. எனவே, ஸ்டேஷன் மாஸ்டரே அதனைத் தன்னதாகப் பாவித்து அதனை ஆதரித்து வந்தார். ஸ்டேஷனுக்கு வெளியே அதற்கு ஒரு வெண்கலச்சிலை நாட்டப் போகிருர்கள். அதில் அந்த நாயின் நன்றியை விளக்கும் பாட்டொன்று பொறிப்பார்கள். டெரு ஆண்டோ என்ற பேர்போன சிற்பி சிலையைச் செய்யப்போகிருர். (இந்த நாயின் எசமானன் யுத்தத்திற்குப்போய் மாண்டுவிட்டார். அவர் வருவார் வருவார் என்று எதிர்பார்த்து அது ஸ்டேஷனில் காத்து நின்றதாம்.)

* * *

தேயிலையின் நூறுண்டு விழா:—இந்தியாவில் தேயிலை பயிரிட ஆரம்பித்து இவ்வருஷத்துடன் 100 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. நூறுண்டுத் திருநாளைக் கொண்டாடத் தேயிலை முதலாளிகள் ஆடம்பரமான ஏற்பாடுகள் செய்கின்றனர். தேயிலை ஆதிகாலம் முதல் சீனவில்தான் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. ஆயினும், அது சீனர் தவிர மற்ற நாட்டவர்களால் உபயோகிக்க ஆரம்பமாகி 100 வருஷங்களேயாகின்றன. இவ்வளவு வியாபகமாக தேயிலைப் பயிர் முதல் முதலாக இந்தியாவில்தான் பிரிட்டிஷாரால் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான செடிகளும் விதைகளும் சீனவிலிருந் தருவிக்கப்பட்டு இந்தியாவில் அஸ்ஸாம் மாகாணத்தில் பயிரிடப்பட்டன. மேஜர் ராபர்ட் ப்ரூஸ் என்னும் ஓர் பிரிட்டிஷார் 1823-ம் ஆண்டில் அஸ்ஸாம் பிரதேசத்தில் சுற்றிக்கொண்டிருக்கையில், அவ்வூர் ஜனங்கள் ஓர்வித இலையைப் பறித்து வெந்நீரில் காய்ச்சிப் பருகிவிட்டுக் களைப்பாறி வருவதைக் கவனித்தார் அது சீன தேசத்தில் காணப்படும் தேயிலையாக விருக்குமோ என எண்ணி அவ்விலைகளில் சிறிதளவைக் கல்கத்தாவிற்குப் பரிசோதனைக்கு அனுப்பினர். ஆராய்ச்சி செய்தவர்கள் அது தேயிலையில்லையெனக் கூறிவிட்டார்கள். 11 வருஷங்களுக் கப்பால், இந்தியாவிற்குக் கவர்னர் ஜெனரலாக வந்த லார்டு வில்லியம் பெண்டிக் என்பவர் ஓர் கமிட்டியை நியமித்து அஸ்ஸாமில் தேயிலை பயிரிடுவதைப்பற்றி ஆராய்ச்சி செய்வித்தார். அவர்கள் விசாரணையில் மேஜர் ப்ரூஸ்அனுப்பிய தழை தேயிலைதானென்றும் அது தானகவே அசாம்காடுகளில் அடர்த்தியாகப் பயிராகின்றது என்றும் அறிந்தனர். அதற்கப்பால் சீனவிலிருந்து கொண்டுவரப்பட்ட செடியுடன் அஸ்ஸாம் செடியையும் ஒட்டுக்கட்டித் தேயிலை தயாராக்கப்பட்டது. இந்தத்தேயிலைதான் இப்பொழுது உலகப் பிரசித்தி பெற்றிருக்கிறது.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., Managers.

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.
Please apply for particulars to:—
T. ANANTACHARI, Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., Managers.

கோடையின் கொடுமை
நீங்கள் ஆயுர்வேத முறைப்படி செய்யப்பட்ட
எங்களுடைய
மணி தைலத்தை
உபயோகித்தீர்களா ?
மூளையைக் குளிரச்செய்து கை கால் கண்களின்
எரிச்சலைச் சமனஞ்செய்து தலை மயிரை நீண்டு
வளரும்படி செய்யும். உடனே வாங்கி
உபயோகியுங்கள்.
5 துலம் தைலங் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1.
இனும் ! கேட்லாக். இனும் !!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)